மன்னா

# மடு அன்னையின் திருத்தலத்தில் ஆடிமாதத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது






இயற்கை வளமும், கத்தோலிக்க பாரம்பரியமும் சிறந்து விளங்கும் மடுத்திருத்தலத்தின் ஆடிமாதத் திருவிழா கடந்த 02ஆம் திகதி முப்படைகளின் பாதுகாப்பிற்கு மத்தியில் சிறப்பாக நடைபெற்றது. இத்திருவிழா மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி வந்தனைக்குரிய பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் கலாநிதி அன்ரனி ஜெயக்கொடி ஆண்டகை அவர்களும், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரும் இலங்கையில் பல்வேறு மறைமாவட்டங்களிலிருந்து வருகைதந்திருந்த குருக்கள் அருட்சகோதர சகோதரிகள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கௌரவ திரு. மோகன்ராஸ் அவர்களும் திருவிழாத் திருப்பலியில் கலந்து கொண்டார்கள். 14




## மடுத்திருத்தலத்தின் தூயகப் பகுதியை விசாலமாக்க அடிக்கல் வைக்கப்பட்டது





வீடமைப்பு, கட்டுமானப்பணி, கலாசார அமைச்சர் கௌரவ சஜித் பிரேமதாச அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள மடுமாதா திருத்தலத்தின் மருதமடுத் திருத்தாயார் எழுந்தருளியிருக்கும் தூயகப் பகுதியை விசாலமாக்கும் பணித்திட்டத்தின் கீழ் புதிய தூயகப்பகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 01.07.2019 அன்று அதாவது ஆடித்திருவிழாவிற்கு முதல் நாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேன்மைதங்கிய இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. இத் திட்டத்தின் கீழ் மடு அன்னையின் பிரதான ஆலயத்தின் பின் பகுதியையும், முன் பகுதியையும் இரு கட்டங்களாக புணரமைக்க அழகிய வரைபடத்தை பொறியியலாளர் திரு. அந்தோனிப்பிள்ளை தேவானந் அவர்கள் வடிவமைத்துள்ளார். முதற் கட்டமாக ஐந்தரைக் கோடி நிதி உதவியில் தூயகப்பகுதியும் அதன் மேல் பகுதி அதாவது டோம் பகுதியும் புணரமைப்பதற்கான ஏற்பாடுகளை மடுத்திருத்தலத்தின் பரிபாலகர் அருட்பணி. பெப்பிசோசை அடிகளார் ஒழுங்குபடுத்தியிருந்தார். மடு அன்னையின் பரிந்து பேசுதலால் விரைவாக இத்திட்டம் முழுமை பெற ஆசிக்கின்றோம்.

## அவுஸ்ரேலியாவில் மடு அன்னையின் திருவிழா





அவுஸ்ரேலியாவில் மடு அன்னையின் திருவிழாத் திருப்பலி கடந்த 07.07.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி வந்தனைக்குரிய பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் சிட்னி, மெரிபா எனும் இடத்தில் பென்றோஸ் பாக் புனித இரக்கத்தின் அன்னை திருத்தலத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. 14

## யோசேவ்வாஸ் நகரில் திருப்பாலத்துவ சிறார்களுக்கு சின்னம் சூட்டும் விழா



கடந்த 07.07.2019 ஞாயிறு அன்று யோசேவ்வாஸ் நகர் பங்கில் 136 திருப்பாலத்துவ சபை சிறார்களுக்கு நிரந்தர அங்கத்தவர்களாக சின்னம் சூட்டும் நிகழ்வு திருப்பலியில் நடைபெற்றது. யோசேவ்வாஸ் நகர் பங்கின் தற்காலிகப் பங்குத்தந்தை அருட்பணியாளர் சூ. லக்கோன்ஸ் பிகறாடோ அடிகளாரும் மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவசபை ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி. ச. சவுல்நாதன் அடிகளாரும் இணைந்து இந்நிகழ்வை அழகாக ஒழுங்குபடுத்தியிருந்தனர். இச்சிறார்களை மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்திப் பாராட்டுகின்றது. இறை இயேசுவின் அழகிய சிறிய மறை தூதுவர்களாக தொடர்ந்து சான்றுபகிர ஆசிக்கின்றோம்.

# மன்னா

பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

# இன்றைய நவீன உலகத்தில் ஆன்மீகம்

இன்றைய நவீன உலகில் அனைத்திற்கும் நேரமுண்டு, ஆனால் தேவையானவற்றுக்கு மனித வாழ்வில் நேரமுண்டா? என்பது கேள்விக்குறியே!

பாடசாலை, அலுவலகம், கல்லூரி, கடைவீதி, விளையாட்டு மைதானம் இதிலேயே போகின்றது வாழ்க்கையின் ஒரு பாதி. இருப்பதோ கொஞ்ச நேரம், அதையும் களவாடுது தொலைக்காட்சியின் மெகா தொடர்கள். வாரத்தில் ஒரு நாள் லீவு கிடைச்சா அதையும் Enjoy பண்ணத்தான் மனசு துடிக்குது. வெட்டியாய்ப்பேசி ஊரை நல்லாச் சுத்துறது. வேலையே இல்லாமல் நண்பர்களோடு தெருவில நிக்கிறது. மணிக்கணக்கா விளையாடுறது. இல்லனா முழுநேரமும் தொலைக்காட்சிக்கு முன்பாக உட்காந்திருப்பது. பொழுது போக்கிற்கு நண்பர்களை அழைப்பது. இல்லையென்றால் வீட்டு சோபாவில் வெட்டியாய் இருப்பது. சமூக வலைத்தளங்களுக்கு நேரமிருக்கு, சொந்த பந்தங்களுக்கு நேரமிருக்கு, அடுத்தவன் வாழ்க்கையில தலையிட நேரமிருக்கு, நாள் முழுக்க சாப்பிட நேரமிருக்கு, பிள்ளைகளுக்கு மேலதிக வகுப்புக்களுக்கு மேலதிகமான நேரமிருக்கு, பெண்களுக்கு அலங்காரம் (Make up) செய்ய நேரமிருக்கு, தொடர் நாடகம் பார்க்க நேரமிருக்கு, விதவிதமான சமையலுக்கு நேரமிருக்கு, தொலைபேசியை நாள் முழுக்க சுரண்ட நேரமிருக்கு, பூங்காவ சுற்றிப் பார்க்க நேரமிருக்கு, நான்கு பேரைச் சேர்த்து நாட்டு நடப்பு பேசவும் நேரமிருக்கு, காதலிக்க நேரமிருக்கு, திருமணத்துக்கு நேரமிருக்கு, ஓய்வெடுக்க நேரமிருக்கு, என்னத்திற்கெல்லாமோ நேரமிருக்கு, ஆனால் நேரத்தைப் படைத்த ஆண்டவருக்கு கொடுக்க கொஞ்சம் நேரமில்லை உனக்கு.

நேரத்துக்கு முன்னாலேயே உன்னை நினைத்தார், நேரத்துக்கு உன்னைப் படைத்தார், உனக்காகத்தானே சிலுவை சுமந்து இறந்தார். ஆனால் உனக்கு வேதாகமம் படிக்க நேரமில்லை. செபம் சொல்லவும் நேரமில்லை, ஆண்டவரோடு செலவிட உனக்கு நேரமில்லை, உனக்கு அது முக்கியம் என்றும் தோன்றவில்லை.

அன்றாடம் ஆண்டவரைத் தேடனும், அதிகாலையில் அவரை நாடனும், நேமெடுத்துச் செபிக்கனும், நேரத்துக்கு நேரம் துதிக்கணும், காலமெல்லாம் காக்கிறவரைக் கொஞ்சமாவது மதிக்கணும், இரவும் பகலும் விவிலியத்தை வாசிக்கணும், உண்மையான ஞானத்தை உணரனும், அதுக்கு நீ இந்தத் தொடர்பு சாதனங்களையெல்லாம் முதலில் ஓரங்கட்டி வைக்கணும். தினமும் ஆண்டவரோடு அமைதியாக அமர்ந்திரு, இந்த உலகத்தைக் கொஞ்சநேரம் மறந்திடு. உன் விலையுயர்ந்த காணிக்கைகள் அவருத்துத் தேவையில்லை, ஏனென்றால் அனைத்துமே அவருடையவை. அவர் கேட்பது உன்னுடைய நேரத்தை, அவர் ஏங்குவது உன்னுடைய உறவுக்காக, கொஞ்ச நேரம் அவரோடு செலவழித்துப்பார்.

ஓடியோடி உழைப்பதை நிறுத்து, உலகத்தின்மேல் நாட்டத்தை நிறுத்து, எல்லாவற்றையும் மறத்து இயேசுவோடு கைகோர்த்து நடக்கத் தொடங்கு.

நீ கூப்பிட்டால் உடனே அவர் வரணும், அவர் கூப்பிட்டா உனக்கு வேலையிருக்கு. ஒரு நிமிடம் அமைதியாக நினைத்துப் பார்... அவர் செய்த நன்மைகளை, அவரது ஆசீர்வாதங்களை, நலமாக்கிய நோய்களை, மணிக்கணக்காக உன்னைப் பாரத்துக் கொண்டிருக்கின்றார், நீயோ கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றாயே.

உன்னை காப்பவரைக் காக்க வைக்காதே, கரை சேர்க்கிறவரை ஏங்க வைக்காதே, வேலையென்று இருந்ததெல்லாம் போதும், பரமன் இயேசுவை உண்மையாகத் தேடு. அன்பின் ஆண்டவரை அறிய ஆயத்தமாகு. அவர் திருமுழுக்கின் மூலம் உன்னை உரிமையாக்கினார், நீ உன் வாழ்நாள் முழுவதும் அவரை உரிமையாக்கு.

மகனே! மகளே!
உன் இளமையில் உன்னை படைத்தவரை மறவாதே

*மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை*
*அன்புடன் அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா,*
*மன்னா பதிப்பாசிரியர்.*

## மன்னார் மறைசாட்சிகள் புனிதநிலையடைய மறைமாவட்டமாக ஒன்றிணைவோம்

♦ எம் மன்னார் மண்ணில் இறை விசுவாசத்திற்காக தம் உயிரைத் தியாகம் செய்த எம் விசுவாசத்தின் சாட்சிகள் புனித நிலையடைய எம் தனிப்பட்ட, குடும்ப, அன்பிய, ஆலய, பங்கு செப நேரங்களில் ஒன்றுபட்டுச் செபிப்போம்.

♦ மன்னார் மறைசாட்சிகளின் பரிந்துபேசுதலில் எம் தேவைகளை இறைதந்தைக்கு ஒப்படைப்போம்.

♦ மன்னார் மறைசாட்சிகள் தொடர்பான ஆவணங்கள், சாட்சியங்கள், தடயங்களை கலையருவியில் ஒப்படையுங்கள்.

# குருத்துவ வாழ்வில் பொன்விழாக்காணும் அருட்பணியாளர்கள்


அன்ரனி எமில் மொறைய்ஸ்


பர்னபாஸ் றெக்ஸ் குலாஸ்

கடந்த 14.05.2019 அன்று குருத்துவ அர்ப்பண வாழ்வில் ஐம்பது ஆண்டுகள் நிறைவு செய்த மன்னார் மறைமாவட்டத்தின் வங்காலைப் பங்கைச் சேர்ந்த அருட்பணியாளர்கள் பர்னபாஸ் றெக்ஸ் குலாஸ் அமதி, அன்ரனி எமில் மொறைய்ஸ் அமதி ஆகியோரை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குருக்களாகிய அருட்பணியாளர்கள் றெக்ஸ் குலாஸ், எமில் மொறைய்ஸ் ஆகியோர் அகில உலகத் திருஅவையில் பல பணிப் பொறுப்புக்களை சவால்கள் நிறைந்த காலத்தில் இறை அர்ப்பணிப்போடு செய்திருக்கின்றார்கள். கடந்த 14.05.2019 அன்று மடுத்திருத்தலத்தில் பொன்விழா நன்றித்திருப்பலியை நிறைவேற்றிய அருட்பணியாளர்கள் வருகின்ற 28.07.2019 அன்று வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் பங்கு ரீதியாக அர்ப்பண விழாவைக் கொண்டாட இருப்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2019

### யூலை

02. மடுமாதா திருவிழா
06. செபமாலை அன்னைத் திருவிழா - பாலையடிப் புதுக்குளம்
 - மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஆயர் நியமனம் பெற்ற தினம் -1992
08. இயேசுவின் திரு இருதயப் பெருவிழா - சிதம்பரபுரம்
 - புனித தோமையார் - கல்நாட்டி
 - புனித தோமையார் திருவிழா - முருங்கன்
 - குழந்தை இயேசு ஆலயம் - இத்திக்கண்டல்
10. புனித ஆரோக்கிய அன்னை திருவிழா - நானாட்டான் பங்குத்திருவிழா
12. திருஇருதய ஆண்டவர் - இலந்தைவான் (பள்ளக்குளி)
13. நல்லாயன் ஆலயத் திருவிழா - மென்டிஸ்பண்ணை
 - புனித செபஸ்ரியார் திருவிழா - மருதமடு
14. மடுமாதா ஆலயம் - மகாறம்பைக்குளம்
 - குழந்தை இயேசு திருவிழா - மன்னார்
15. புனித மரிய கொறற்றி திருவிழா - பெரியபண்டிவிரிச்சான்
 - புனித பற்றிமா அன்னை ஆலயம் - அண்ணாநகர்
16. புனித கார்மேல் அன்னைத் திருவிழா - கார்மேல்நகர் (பொற்கேணி), இளமருதங்குளம், ஆவணம், அளவக்கை, பறப்பாங்கண்டல்
 - கார்மேல் சபை அருட்சகோதரிகள் விழா
 - புனித கப்பலேந்தி மாதா திருவிழா - பெரிய நொச்சிக்குளம்
20. புனித கார்மேல் அன்னைத் திருவிழா - நாகர் இலுப்பைக்குளம்
22. பற்றிமா அன்னை திருவிழா - அண்ணா நகர்
25. புனித யாகப்பர் - கொக்குப்புடையான், நறுவிலிக்குளம், பறப்பாங்கண்டல், விடத்தல்தீவு, முருங்கன் கமம், கட்டுக்காரன் குடியிருப்பு, சிறுநீலாசனை, சிவபுரம்
26. புனித அன்னம்மா - கொக்குப்படையான், வங்காலை, பூவரசன்குளம்
27. புனித அந்தோனியார் - பன்னவெட்டுவான்
 - புதுமைமாதா திருவிழா - குகன்நகர்
28. சதாசகாய மாதா ஆலயம் - கந்தபுரம் (வேப்பங்குளம்)

■ வியாழக்கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் 7 மணி வரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்

# அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் இறைபதம் அடைந்தார்



யாழ் மறைமாவட்டத்தின் மூத்த குருவாகிய அருட்பணி. ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் யூலை மாதம் 11ஆம் திகதி கொழும்பில் மாரடைப்பால் தமது 74வது வயதில் காலமானார். அருட்பணி. ஜேம்ஸ் அடிகளார் யாழ். மனித முன்னேற்ற நடு நிலையத்தின் இயக்குனராகவும், உருத்திரபுரம் ஆரோபணம் இளையோர் விடுதியின் இயக்குனராகவும், வன்னிப் பெரும் நிலப்பரப்பில் பல பங்குத்தளங்களில் பங்குத்தந்தையாகவும், ஆன்மீக சமூகப்பணிகளில் தம்மை ஈடுபடுத்தி அர்ப்பணிப்புடன் இறைத் தொண்டராற்றிய அன்புக்குரிய குருவானவராவார். அடிகளார் சுனாமிப் பேரலையின் அனர்த்தத்தின்போது முல்லைத்தீவுப் பங்குத்தந்தையாக இருந்து பாதிப்புற்றோரின் துயர் துடைத்தவர். இறுதி ஈழப்போரின்போது வலைஞர் மட ஆலய வளாகத்தில் காயமுற்று போரில் துன்புற்ற மக்களோடு தம்மை அடையாளப்படுத்தியவர். அருட்பணி. ஜேம்ஸ் அடிகளாரின் இழப்பு யாழ். மறைமாவட்டத்திற்கு பேரிழப்பாகும். அடிகளாரின் ஆன்மீக சமூகப்பணிக்காக ஆண்டவருக்கு நன்றி கூறுவதுடன் அருட்தந்தையின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்னார் மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர், மறைமாவட்ட குருக்கள், துறவிகள் சார்பாக மன்னா ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

# வத்திக்கான் உயர் பணிக்கு இலங்கை அருட்பணியாளர் நியமனம்



இலங்கைத் திருஅவையின் பதுளை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. இந்துனில் கொடித்துவக்கு அவர்கள் வத்திக்கானின் பல்சமய கலந்துரையாடலுக்கான செயலராக திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளார். இவ் நியமனத்தின் மூலம் வத்திக்கானில் உயர் பீடப் பதவியொன்றை வகிக்கும் இலங்கையர் என்ற பெருமையை அருட்பணியாளர் இந்துனில் கொடித்துவக்கு அடிகளார் பெறுகின்றார். அருட்தந்தையின் பணிவாழ்வு சிறக்க மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

# யூபிலி விழாக்காணும் அருட்சகோதரி



கிறிஸ்துவுக்குள் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் அர்ப்பண வாழ்வில் 50ஆண்டுகளை நினைவு கூர்ந்து (31.05.1969 - 31.05.2019) தனது சொந்தஊராம் பள்ளங்கோட்டைக் கிராமத்தில் 06.07.2019 அன்று ஆண்டவருக்கு நன்றிப்பலியினை தன் உறவுகள் ஊர்மக்களுடன் சேர்ந்து நிறைவேற்றி மகிழ்ந்த பள்ளங்கோட்டையின் முதல் துறவி அருட்சகோதரி. ஷமிலா அ.கா அவர்களை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தைக் காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்.

*-மன்னா நிர்வாகம்-*

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# யோசேவ்வாஸ்நகர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்ற உறுதிப்பூசுதல் திருச்சடங்கு.







30.06.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை மன்னார் மறைமாவட்ட ஆயர் ஆண்டகை அவர்களினால் யோசேவ்வாஸ்நகர் மாணவ, மாணவிகளுக்கான உறுதிப்பூசுதல் திருச்சடங்கு இடம் பெற்றது. உறுதிப்பூசுதல் திருவருட்சாதனத்தைப் பங்குத் தந்தையுடன் இணைந்து மறையாசிரியர்கள், பங்குமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை உறுதிப்பூசுதல் பெற்ற பிள்ளைகளுக்கும், இவர்களை ஆயத்தம் செய்த ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், பங்குத் தந்தைக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றது. ●

# சிதம்பரபுரம் திரு இருதய ஆண்டவர் ஆலயத்திருவிழா சிறப்பாக நடைபெற்றது







வவுனியா கோமரசன்குளம் பங்கின் துணை ஆலயமாகிய சிதம்பரபுரம் திரு இருதய ஆண்டவர் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 14.07.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.30 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி. செல்வநாதன் பீரிஸ் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் அழகாக நடைபெற்றது. திருவிழாத் திருப்பலியை அருட்பணி. லக்ஸ்ரன் டீ சில்வா தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். அருட்சகோதரிகளும், இறைமக்களும் இத்திருவிழாவில் பங்கெடுத்து இறையாசீர் பெற்றுச் சென்றனர். கோமரசன்குளம் பங்குத்தந்தை அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ் ஆலய அருட்பணி பேரவையோடு இணைந்து திருவிழா ஒழுங்குகளை சிறப்பாக நெறிப்படுத்தியிருந்தார். வவுனியா மறைக்கோட்டத்தின் மிகப் பழமையான பங்குகளில் பெரிய கோமரசன்குளமும் ஒன்றாகும். ●

# மன்னார் சாந்திபுரத்தில் முதல்நன்மை அருட்சாதனக் கொண்டாட்டம்



மன்னார் சாந்திபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 07.07.2019 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 7.00 மணிக்கு அருட்தந்தை டெஸ்மன் குலாஸ் அடிகளாரினால் திருப்பலி நிறைவேற்றப்பட்டு 19 சிறுவர் சிறுமியருக்கு முதல்நன்மை திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. இத் திருப்பலியில் பங்குமக்கள் அனைவரும் கலந்து சிறுவர் சிறுமியருக்காக வேண்டிக் கொண்டனர்.

அருட்சகோதரி கிறிஸ்ரில்டா மற்றும் தரவன்கோட்டை மறையாசிரியை வியான்னி ஆகியோர் சிறுவர் சிறுமியரையும் வழிபாடுகளையும் சிறப்புற ஆயத்தப்படுத்தியிருந்தனர். இதனைப் பங்குத்தந்தை அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார் ●

# 150ஆவது யூபிலி ஆண்டுக்கான கால்கோள்விழா




மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை தனது 149வது அகவையில் தடம் பதித்து 150வது ஆண்டை எட்டவிருக்கும் இந்நிலையில் (1870 – 2020) 150வது யூபிலி ஆண்டிற்கான கால்கோள் விழா கடந்த திங்கட்கிழமை 10.06.2019 காலை 08.00 மணிக்கு கல்லூரியின் முதல்வர் அருட்சகோ. றெஜினோல்ட் அவர்களின் தலைமையில், மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களின் கூட்டுத் திருப்பலியோடு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் இசைக்குழுவினரின் மகிழ்வொலியோடும், மற்றும் சாரணர், சென். ஜோண்ஸ் குழு, கடேற் குழு ஆகியோரின் அணிவகுப்புடன் விழா மேடையை நோக்கி அழைத்து வரப்பட்டனர். அதன்பின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. ●

*(கடந்த மாத இதழின் தவறிற்கு வருந்துகின்றோம்)*

# மானங்கவெளி புனித சூசையப்பர் புதிய ஆலய அடிக்கல் நாட்டு விழா





பொன்தீவுகண்டல் பங்கின் துணை ஆலயமான மானங்கவெளி புனித சூசையப்பர் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டு விழா 2019 வைகாசி 12ஆம் திகதி மாலை 5.00 மணியளவில் விமரிசையாக நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிகழ்வில் முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் சுரேஸ் றெவ்வல் அடிகளாரும், ஆயரின் செயலாளர் அருட்பணி. நீக்கிலாஸ் அடிகளாரும், பங்கு மேய்ப்புப்பணி உறுப்பினர்களும், வாழ்க்கைப்பெற்றாங்கண்டல் ஆலய பெரியவர்களும், கிராம அலுவலர் மற்றும் பாடசாலை அதிபர் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

➡ 14

# மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசத்திற்கு புதிய நிர்வாகம்





மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாச பொதுக்கூட்டம் கடந்த 07.06.2019ஆம் திகதி இயக்குனர் அருட்பணி. அல்பன் இராஜசிங்கம் அடிகளாரின் வழிநடத்தலில் கலாபூசணம் திரு. எஸ்.ஏ. மிராண்டா அவர்களின் தலைமையில் காலை 9.30 மணிக்கு குடும்பநலப் பணியக மண்டபத்தில் இடம் பெற்றது.

மறைமாவட்டத்திலுள்ள 32 பங்குகளிலும் இருந்து 100இற்கும் அதிகமானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தின் ஆரம்பத்தில் தலைவர், இயக்குனர் ஆகியோரின் உரைகளோடு புதிய நிர்வாகத் தெரிவை சிறப்பு அழைப்பில் வருகைதந்திருந்த அருட்பணி. நவரட்ணம் அடிகளாரும், மன்னார் பிரதேசசபை சமூகசேவை அலுவலர் திரு எஸ். சந்திரபொஸ் அவர்களும் முதியோர் சமாசத்தின் ஈராண்டுக்கான உத்தியோகத்தர் தெரிவினை முன்னின்று சிறப்பாக நடாத்தினார்கள்.

➡ 14

# லண்டன் தமிழ் ஆன்மீகப் பணியகத்தின் வோல்சிங்கம் அன்னையின் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது







லண்டன் ஆன்மீகப் பணியகம் ஆண்டு தோறும் நடாத்தும் வோல்சிங்கம் திருத்தல அன்னையின் யூலை மாத வருடாந்தத் திருவிழா 14.07.2019 அன்று அருட்பணி. எல்மோ அருள்நேசன் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. வழிபாடுகள் காலை 10.15மணிக்கு கொடியேற்றம், திருச்செபமாலை, நற்கருணை சிறப்பு வழிபாடும் ஆசீரும் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து 12.15மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சுரூப ஆசீர்வாதமும் இடம்பெற்றது. லண்டன் நாட்டின் பல பாகத்திலுமிருந்து பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மதபேதமின்றி ஒன்றுகூடி அன்னையின் ஆசீரைப் பெற்றுச் சென்றனர். ●

## உலகச் செய்திகள்

# 10வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அமெரிக்க நாட்டின் சிக்காக்கோ மாநிலத்தில் நடைபெற்றது








இம் மாநாட்டில் இலங்கையில் இருந்து பங்கெடுக்கும் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மடுமாதா சிறிய குருமட அதிபர் அருட்பணி. நேசரெட்ணம் (தமிழ் நேசன்) அடிகளார், யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார், பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி, பேராசிரியர் புஸ்பரெட்னம் ஆகியோரையும் அருட்பணி. நேசரெட்ணம் ஆங்கிலத்தில் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம். ●

உலகத் திருச்சபைச் செய்திகள்

# வாழ்வைப் பாதுகாப்பது மருத்துவர்களின் கடமை

வாழ்வை ஆரம்பம் முதல் இயற்கையான இறுதி வரை காப்பதே மனிதாபிமானம் உள்ள சமுதாயம். மருத்துவர்கள் வாழ்வைக்காக்கும் பணியில் ஈடுபடவேண்டுமேயொழிய அதை எடுப்பதற்கு அல்ல. வாழ்வைப் பாதுகாப்பது சமுதாயத்தின் கடமை என்பதையும் குறிப்பாக மருத்துவர்கள் வாழ்வைக் காக்கும் பணியில் ஈடுபடவேண்டும் என்பதையும் வலியுறுத்தி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழுத்தந்திருத்தமான ஒரு கருத்தை யூலை 10ஆம் திகதி தன் டுவிட்டர் செய்தியாக வெளியிட்டார்.

“ஆதரவின்றி இறப்பதற்கு விடப்படும் நோயுற்றோருக்காக நாம் செபிக்கின்றோம். வாழ்வதற்கு யார் தகுதியுடையவர். யார் தகுதியற்றவர் என்ற தெரிவுகளை மேற்கொள்ளாமல் ஒவ்வொரு வாழ்வையும் அதன் ஆரம்பம் முதல் இயற்கையான இறுதி வரை காப்பதே மனிதாபிமானம் உள்ள சமுதாயம். மருத்துவர்கள் வாழ்வைக் காக்கும் பணியில் ஈடுபடவேண்டுமேயொழிய அதை



எடுப்பதற்கு அல்ல.” என்ற சொற்கள் திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியில் பதிவாகியிருந்தன.●

# பிறரன்பு நடவடிக்கைகளில் முதலிடம் பெறுவோர்



ஒடுக்கப்பட்டோர், பாகுபாட்டுடன் நடத்தப்படுவோர், உரிமை மீறல், சுரண்டல், கைவிடப்படுதல் ஆகிய கொடுமைகளால் துன்புறுவோர் மற்றும் ஏழைகள் ஆகியோரை அன்புகூர்ந்து காக்கவேண்டிய இயேசுவின் விண்ணப்பத்தை நிறைவேற்றுவோம். இத்தாலியின் லாம்பதூசா தீவுக்குச் சென்று புலம்பெயர்ந்தோரைச் சந்தித்ததன் ஆறாம் ஆண்டு நினைவையொட்டி புலம்பெயர்ந்தோருடன் வத்திக்கானில் நிறைவேற்றிய திருப்பலியில் இவ்வாறு திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்.

➡ 14

# “எப்போதும் ஒவ்வொரு உயிரும் மதிப்புள்ளது”



கருவில் உருவாவது முதல் இயற்கை மரணம் அடையும் வரை மனித உயிர்கள் மதிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பாரிஸ் மாநகரில் யூலை 11ஆம் திகதி இறையடி சேர்ந்த வின்சென்ட் லாம்பெர்ட் என்பவரின் மரணத்தை மையப்படுத்தி திருத்தந்தை தன் டுவிட்டர் செய்தியை வெளியிட்டார். “இறைவன் வின்சென்ட் லாம்பெர்ட்டை தன் கரங்களில் அரவணைத்து வரவேற்பாராக. வாழத் தகுதியற்றவர்கள் என்று நாம் எண்ணும் மனிதரை, வீசியெறியும் கலாசாரத்தை நாம் உருவாக்காமல் இருப்போமாக. ஒவ்வொரு உயிரும் மதிப்புள்ளது. எப்போதும்” என்ற சொற்கள் திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியில் இடம்பெற்றன.

பாரிஸ் மாநகரின் வின்சென்ட் லாம்பெர்ட் பாரிஸ் மாநகரின் ஒரு மருத்துவமனையில் உடல் உறுப்புக்களில் உணர்விழந்து, மூளையும் பாதிக்கப்பட்ட நிலையில், 2008ஆம் ஆண்டு முதல் வாழ்ந்துவந்த வின்சென்ட் லாம்பெர்ட் என்ற 42 வயது நிறைந்த மனிதர் வாழ்வாதாரங்கள் நீக்கப்பட்டு, இறப்பதற்கு விடப்பட்ட நிலையில், யூலை 10ஆம் திகதி திருத்தந்தை வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், “வாழ்வதற்கு யார் தகுதியுடையவர், யார் தகுதியற்றவர் என்ற தெரிவுகளை மேற்கொள்ளாமல், ஒவ்வொரு வாழ்வையும் அதன் ஆரம்பம் முதல் இயற்கையான இறுதி வரை காப்பதே மனிதாபிமானம் உள்ள சமுதாயம்” என்ற சொற்கள் பதிவாகியிருந்தன.

➡ 14

# இறைவனின் அன்புக் குழந்தைகள்



“பாலம் அமைப்பவர்” என்ற பொருள்படும் Pontifex என்ற இலத்தீன் சொல்லை, தன் டுவிட்டர் முகவரியாகக் கொண்டு முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள், 2012ஆம் ஆண்டு டிசம்பரில் டுவிட்டர் செய்திகளைத் தொடக்கினார். நாம் கடவுளின் அன்புப் பிள்ளைகள் என்பதை நம்மில் உயிர்த்துடிப்புடன் வைத்திருப்பது விசுவாசமே என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார். யூலை 12ஆம் திகதி வெளியான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டர் செய்தியில் “நாம் கடவுளின் அன்புக் குழந்தைகள் என்பதை ஆழமான மற்றும் அழகான பற்றுறுதியுடன் வாழச் செய்வது. விசுவாசம் எனும் கொடையே” என்ற சொற்கள் இடம்பெற்றிருந்தன.

➡ 15

# சமுதாய நீதி, சுற்றுச்சூழல் ஒன்றோடொன்று தொடர்புடையவை

நம் பொதுவான இல்லமாகிய இப்பூமியைப் பாதுகாப்பது குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ‘Laudato si’ திருமடலை வெளியிட்ட பின்னர் இத்தாலியின் பல்வேறு இடங்களில் ‘Laudato si’ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் சீர்கேட்டால் ஏழைகளே அதிகம் பாதிக்கப்படும்வேளை இவ்வுலகில் வாழ்கின்ற ஒவ்வோர் உயிரின் அழகையும், கூறுபடாத தன்மையையும் பாதுகாத்து அவற்றை வருங்காலத்திற்குக் கொடுப்பதற்கு உலகினரில் வாழும் நிலையில் புதுப்பித்தல் அவசியம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

இத்தாலியில் 2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் கடும் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட Amatrice நகரில் ‘அமேசான் கோளம்’ என்ற தலைப்பில் யூலை 06 ஆம் திகதி கூட்டம் நடாத்திய ‘Laudato si’ குழுவுக்கு செய்தி அனுப்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் Amatrice பகுதியில் இடம்பெற்றுவரும் மறுசீரமைப்புப் பணிகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

Amatric இனால் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 300க்கும் அதிகமான மக்கள் பலியானார்கள். இது நடந்து இரண்டு மாதங்கள் சென்று அவ்விடத்தைப் பார்வையிட்டது இன்னும் நினைவில் மறையாமல் உள்ளது என்றும், பாதிக்கப்பட்ட அம்மக்களின் நினைவு தனது இதயத்தில் எப்போதும் இருக்கின்றது என்றும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.



நம் பூமிக்கோளத்தை மாசுபடுத்தும் நெகிழிப் பொருள்கள் குறித்து ‘Laudato si’ குழுக்கள் கடந்த ஆண்டில் கூட்டம் நடத்தின என்றும் இவ்வாண்டு அமேசான் மற்றும் அப்பகுதியில் வாழ்கின்ற மக்களின் நிலைமை குறித்தும் சிந்திக்கின்றது என்றும் கூறியுள்ள திருத்தந்தை சமுதாய நீதியும் சுற்றுச்சூழலும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதை மறக்க வேண்டாமெனக் கேட்டுக்கொண்டார்.

➡ 15

# நீதிபதிகளுக்காகவும், வழக்கறிஞர்களுக்காகவும் செபிப்போம்

நீதி வழங்கும் பணிகளில் ஈடுபட்டிருப்போர் நேரிய பண்புடையவர்களாக பணியாற்றவும் அதன் பயனாக அநீதி இறுதி வெற்றியடையாமல் இருக்கவும் நாம் செபிப்போமாக. நீதியை நிலைநாட்டும் பொறுப்பில் பணியாற்றும் நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் நேரிய பண்புடையவர்களாகவும், மனித மாண்பை மதிப்பவர்களாகவும் பணியாற்ற செபிப்போமாக என்ற கருத்தை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் யூலைமாத இறைவேண்டல் கருத்தாக வெளியிட்டார். திருத்தந்தையின் செபக்கருத்துக்களை ஒவ்வொரு மாதமும் The Pope Video காணொளி வழியே வெளியிட்டுவரும் இறைவேண்டலின் திருத்தூதுப் பணி அமைப்பு யூலை 4ஆம் திகதி வெளியிட்ட காணொளியில் நீதியை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டுள்ளோருக்காகச் செபிக்குமாறு திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார்.

➡ 15




# துயர நேரங்களில் இறைவனில் ஆழ்ந்த நம்பிக்கை தேவை

வாழ்வில் அமைதி நிலவும் நேரங்களைவிட துன்ப நேரங்களில் நம் நம்பிக்கையாகிய இயேசுவோடு ஒன்றித்திருப்பதற்கு விசுவாசிகள் முன்னுரிமை அளிக்க வேண்டும். விசுவாசிகள் மற்ற எல்லா நேரங்களையும்விட தங்களின் துயர நேரங்களில் இறைவனில் ஆழ்ந்த நம்பிக்கை வைக்க வேண்டுமென்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் யூலை 05ஆம் திகதி தன் டுவிட்டர் செய்தி வழியாகக் கேட்டுக்கொண்டுள்ளார். “வாழ்வில் அமைதி நிலவும் நேரங்களைவிட துன்ப நேரங்களில் நம் நம்பிக்கையாகிய இயேசுவோடு ஒன்றித்திருப்பதற்கு விசுவாசிகள் முன்னுரிமை அளிக்க வேண்டும்” என்ற சொற்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டர் செய்தியில் இடம்பெற்றிருந்தன.

மேலும் யூலை 4ஆம் திகதி பிற்பகலில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கும் இரஷ்ய அரசுத்தலைவர் புடின் அவர்களுக்கும் இடையே திருப்பீடத்தில் ஏறத்தாழ ஒரு மணி நேரம் நடைபெற்ற கலந்துரையாடலில் சிரியா, உக்ரைன், வெனெசுவேலா ஆகிய நாடுகளில் நிலவும் பிரச்சனைகள் இரஷ்யாவில் கத்தோலிக்கத் திருஅவையின் வாழ்வுமுறை போன்றவை இடம்பெற்றன என்று திருப்பீடம் அறிவித்தது. சுற்றுச்சூழல் முன்வைக்கும் சவால்கள் குறித்தும் இவ்விரு தலைவர்களும் கலந்துரையாடினர் என்றும் திருப்பீடம் அறிவித்தது. புடின் அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ்



அவர்களை திருப்பீடத்தில் சந்தித்தது மூன்றாம் முறையாகும். மேலும் யூலை 4ஆம் திகதி புடின் அவர்கள் வத்திக்கானுக்கு வந்தது அவரது ஆறாவது பயணம் என்பதும் குறிப்பிடத்தக்கது.●

# இலங்கைத் திரு அவையின்
# புதிய பணிப் பொறுப்புக்கள்

## இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை
## புதிய நியமனங்கள் 2019 – 2022

**தலைவர்**
மேதகு. J. வின்ஸ்டன் S. பர்னாந்து SSS ஆண்டகை

**உபதலைவர்**
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை

**செயலாளர்**
மேதகு. J.D. அன்ரனி ஆண்டகை

**நிரந்தர உறுப்பினர்**
மேதகு. J. வின்ஸ்டன் S. பர்னாந்து SSS ஆண்டகை
மேதகு. J.D. அன்ரனி ஆண்டகை
அதிமேதகு. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை
மேதகு. நோபட் M. அந்திராடி (OMI) ஆண்டகை
மேதகு. ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை

**நிதித்துறை ஆணைக்குழு**
மேதகு. ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை - தலைவர்
மேதகு. D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை - உபதலைவர்
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை - உபதலைவர்

**உதவிச் செயலாளர் – கத்தோலிக்க ஆயர் பேரவை**
அருட்பணி. டோனி மார்ட்டின்

**கல்வி, மறைக்கல்வி, விவிலியப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை - தலைவர்
மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை - உபதலைவர்

**நீதி, சமாதானம், மனித முன்னேற்றப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை - தலைவர்
மேதகு. மெக்ஸ்வல் கிறன்வில் சில்வா - உபதலைவர்

**புலம்பெயர்ந்தோர் உடல்நலம், சுற்றுலா, சிறைச்சாலைப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை - தலைவர்
மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை - உபதலைவர்

**மத உரையாடல், உறவுகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. நோபட் M. அந்திராடி (OMI) ஆண்டகை - தலைவர்
மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை - உபதலைவர்

**சமூக தொடர்பாடலுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. மெக்ஸ்வல் கிறன்வில் சில்வா - தலைவர்
மேதகு. நோயல் இம்மானுவேல் ஆண்டகை - உபதலைவர்

**துறவறு, உலக சபைகள், குருக்கள், குருமாணவர்களுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. J. வின்ஸ்டன் S. பர்னாந்து SSS ஆண்டகை - தலைவர்
மேதகு. D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை - உபதலைவர்
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை - உபதலைவர்

**மறைபரப்புப் பணிக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை - தலைவர்
மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை - உபதலைவர்

**திருவழிபாடு, கலாசாரப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. கிளிட்டஸ் C. பெரேரா (O.S.B) ஆண்டகை - தலைவர்
மேதகு. F. லயனல் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை - உபதலைவர்

**பொது நிலையினருக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை - தலைவர்
மேதகு. ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை - உபதலைவர்
மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை - உபதலைவர்

**பொது மக்கள் தொடர்பு**
அதிமேதகு. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

**ஒழுக்கவியல், திருச்சபைச் சட்ட ஆலோசகர்**
அதிமேதகு. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை - தலைவர்
மேதகு. D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை - உபதலைவர்
மேதகு. நோயல் இம்மானுவேல் ஆண்டகை - உபதலைவர்
மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை - உபதலைவர்

**மிசியோ புலமைப்பரீட்சை கல்விக்கான அமைப்பு**
மேதகு. ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை - தலைவர்
மேதகு. F. லயனஸ் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை - உபதலைவர்

**இலக்குக் கல்விக்கான ஆயர் அமைப்பு**
மேதகு. J.D. அன்ரனி ஆண்டகை - தலைவர்
அருட்பணி. டோனி மார்ட்டின் அடிகளார் - நடுவர்

**யோசவாஸ் செயலகம்**
மேதகு. வியானி பர்னாந்து ஆண்டகை - கண்டி - தலைவர்

**யோசவாஸ் நிதியம்**
அதிமேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை - தலைவர்

**லயனல் B. இம்மானுவேல் அறக்கட்டளை நிதியம்**
மேதகு. ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை - தலைவர்
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை - உபதலைவர்

கிறிஸ்துவின் பணியாளர்களுக்கு பதவி உயர்வு, அல்லது பதவி மாற்றம் அல்ல. மாறாக கிறிஸ்துவுக்குள் பணிமாற்றம். கிறிஸ்துவின் பணிகளைப் பொறுப்பேற்றுள்ள எம் திருச்சபையின் திருநிலைப்பணியாளர்களுக்காகவும் அவர்கள் ஏற்றிருக்கின்ற பணிகள் சிறப்பாக அமையவும் எம் செபத்தில் அனைவரையும் நினைவு கூருவோம்.

## தேசிய ஆணைக்குழுக்களின் இயக்குனர்களுக்கான பணிமாற்றம் 2019 – 2022

**01.மறைக்கல்வி, கல்வி வேதாகம ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. பேனட் சாந்த பர்னாந்து
– மறைக்கல்வி மற்றும் வேதாகமம்
அருட்தந்தை. ஜவன் பெரேரா
– கல்வி

**02.சமூக தொலைத் தொடர்பாடல் பற்றிய தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. லால் புஷ்பதேவ (அமதி)

**03.மத உரையாடல் ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. பெசில் றொகான் பர்னாந்து

**04.திருவழிபாடு, கலாசாரப்பணிகளுக்கான ஆணைக் குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. T. சூசைநாதன்

**05.பொதுநிலையினர் ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. றோய் கிளரென்ஸ்

**06.சிறிய கிறிஸ்தவ குழுக்கள் (அசிபா) ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. ஹயசிந்த் திரேசா

**07.புனித வின்சன் டி போல் சபை ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. றோய் கிளரென்ஸ்

**08.கத்தோலிக்க தேசிய பொதுநிலையினருக்கான ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. டோனி மார்ட்டின்

**09.சமாதானம் மற்றும் மனித அபிவிருத்தி பற்றிய தேசிய ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. மகேந்திர குணதிலக்க

**10. புலம் பெயர்ந்தோர், உடல் நலம், சுற்றுலா, சிறைச்சாலை பணிகளுக்கான தேசிய ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. சஞ்சீவ மெண்டிஸ்

**11.மரியாயின் சேனை ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. இக்னேஷியஸ் வர்ணகுலசிங்கம்

**12.கத்தோலிக்க இளைஞர் சங்கத்தின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. மெல்கம் பெரேரா

**13.குடும்ப அப்போஸ்தலிக்க பணியகத்தின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. குளோட் N. நோனிஸ்

**14.குருசில்லோ ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. டோனி மார்ட்டின்

**15.புனித லூக்காவில் மருத்துவக்குழு ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை. கிறிஸ்பின் லியோ●

## மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர்களுக்கான
## புதிய பணி மாற்றங்கள்

01. அருட்பணி. ச. எமிலியானுஸ்பிள்ளை
- பொறுப்பாளர் குருக்களின் தொடர் உருவாக்கம்
- கொள்பிங் சபையின் மறைமாவட்ட இயக்குனர்

02. அருட்பணி. அ. ஆரோக்கியம்
- பங்குத்தந்தை, ஜோசவ்வாஸ் நகர்

03. அருட்பணி. சூ. லக்கோன்ஸ் பிகிறாடோ
- பங்குத்தந்தை அளவக்கை

04. அருட்பணி. சூ. மில்ரன் தேவராஜா
- இயக்குனர் தியான இல்லம், மடு
- விசேட மறையுரைப் பணி

05. அருட்பணி. ப. ஜோண் ஸ்ரனின் சோசை
- பங்குத்தந்தை பறப்பாங்கண்டல்

06. அருட்பணி. வேதநாயகம் ரஞ்சன் சேவியர்
- உதவிப்பங்குத்தந்தை பேசாலை

07. அருட்பணி. மரிசால் சதாஸ்கர்
- உதவிப்பங்குத்தந்தை, வங்காலை

08. அருட்பணி. மடுத்தீன் தேவராஜன்
- பதுளை மறைமாவட்டம்

09. அருட்பணி. றோ. மேரி பஸ்ரியன்
- உதவிப் பங்குத்தந்தை அரிப்பு

10. அருட்பணி. அ. மரியகிளைன் (வி.ச)
- உதவிப் பரிபாலகர் மடுத்திருத்தலம்

11. அருட்பணி. அ. பசில் கிளைன் (வி.ச)
- உதவிப்பங்குத்தந்தை இறம்பைக்குளம்

12. அருட்பணி. ஜெஸ்மன்ராஜ்
- உதவிப்பங்குத்தந்தை புனித செபஸ்ரியார் பேராலயம் மன்னார். ●

**மன்னா வாசகர்களே,**
மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## மறைப்பணியாளருக்காகச் செபிப்பது நம் கடமை

இயேசு வழங்கிய அறிவுரைகளைப் பின்பற்றும் மறைப்பணியாளர்கள் இயேசுவின் சீடர்களைப்போல் மகிழ்வுடன் திரும்புவர் அவர்களது பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்படும். இவ்வுலகில் பணியாற்றப் போதிய வேலையாளர்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுவோம் என்று யூலை 7ஆம் திகதி வழங்கிய மூவேளை செப உரையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

உலகில் சென்று நற்செய்தியை அறிவிப்பதற்கு தன் 12 திருத்தூதர்களுடன் மேலும் 72 சீடர்களை இயேசு அனுப்பியதுபற்றி கூறும் நற்செய்தியை புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான விசுவாசிகளுக்கு வழங்கிய மூவேளை செப உரையின் மையக்கருத்தாக திருத்தந்தை வழங்கினார். திறந்த மனதுடனும், மறைபரப்புப்பணியில் ஆர்வமுடனும், மறைபரப்புப் பணியாளருக்காகச் செபிக்கவேண்டியது நம் ஒவ்வொருவருக்கும் உள்ள கடமை என்பதை திருத்தந்தை தன் உரையில் சுட்டிக்காட்டினார். இயேசு தன் சீடர்களை அனுப்புவதற்கு முன் வழங்கிய அறிவுரைகள் இப்பணியானது செபத்தை எவ்வாறு அடிப்படையாகக் கொண்டுள்ளது, எவ்வாறு தன் சீடர்கள் ஏழ்மையைக் கடைப்பிடிக்கவேண்டும், அமைதியையும், குணப்படுத்துதலையும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது என்பதை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எடுத்துரைத்தார். ●

புதுப்பித்தல் ஆண்டு சிறப்புக் கட்டுரைகள்

# குடும்ப மறைக்கல்வியும் இக்காலத் தேவையும்

- அருட்பணி. A. ஆரோக்கியசாமி, வேலூர்-

### முன்னுரை

அவர் ஓர் அருட்பணியாளர். 25 ஆண்டுகளுக்கு மேலாக குருத்துவக் கல்லூரியில் இறையியல் கற்றுக்கொடுத்த பேராசிரியர். ஓய்வு பெறுகின்ற தனது கடைசிக் காலத்தில் மறைமாவட்டத்தின் மிகக் கஸ்ரமான பங்குத்தளத்தில் பணிபுரிந்தார். அவரது எளிய வாழ்க்கையைப் பார்த்து மக்கள் வியந்து பேசினார்கள். ஒருமுறை தனது விசுவாச வாழ்க்கை அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கின்றபோது அவர் சொன்னது. “நான் சிறுவயதில் கத்தோலிக்கப் பள்ளியில் ஆரம்பக் கல்வியைக் கற்றேன். உயர்கல்லூரியில் பயின்றேன். ஏழு வருடங்கள் குருத்துவப் பயிற்சியை குருத்துவக் கல்லூரியில் பெற்றேன். 25 வருடங்கள் அதே குருத்துவக் கல்லூரியில் இறையியலை கற்றுக்கொடுத்தேன். இத்தளங்கள் எனக்கு ஏராளமான விசுவாச பயிற்சிகளைக் கொடுத்தன. பல விசுவாச கோட்பாடுகளையும், இறையியலையும் கற்றேன். எனது அறிவு பரந்து விரிந்தது. ஆனால் இன்று எனது அகக் கண்களைத் திறந்து விசுவாச வாழ்க்கையை நோக்குகின்றபோது மேற்சொன்ன அனைத்தும் என் நினைவிற்கு வரவில்லை. மாறாக, சிறுவயதில் என் தாய் தந்தை எனக்குக் கற்றுக்கொடுத்த சின்னச்சின்ன செபங்களும், குடும்பத்தில் எனக்குக் கிடைத்த இறையனுபவமுமே என்னை இன்று இப்படி வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது. எனக்கு உடல்நிலை சரியில்லாத தருணங்களிலும், குடும்பப் பிரச்சினை நேரங்களிலும் எனது தாய் இரவு நேரங்களில் மண்டியிட்டு தனியாகச் செபிப்பார். அதை என் தாய்க்குத் தெரியாமல் அவதானித்திருக்கின்றேன். கண்களில் கண்ணீர் வரும். விடியற்காலையில் படுக்கையிலிருந்து எழுகின்றபோது முழங்கால்படியிட்டு செபிப்பார். இவைதான் நான் எங்கு சென்றாலும் திவ்விய நற்கருணை முன்பு முழங்கால் படியிட்டு செபிக்கும் பழக்கத்தை எனக்குக் கற்றுக்கொடுத்தன. செபத்தின் வலிமையை புரிய வைத்தன.”

வயது முதிர்ந்த நிலையிலும் என் தந்தை திருப்பலியில் பங்கேற்க செல்வார். மற்றவர்கள் தன்னைப் பார்க்க வேண்டும் என்பதற்காக அல்ல, திருப்பலியில் பங்கேற்று தினமும் திவ்விய நற்கருணை உட்கொண்டால் கிடைக்கும் பலன்களை என்னிடத்தில் விவரிப்பார். இவைதான் சிறுவயதில் நானும் என் தந்தையோடு கை பிடித்து திருப்பலி செல்வதற்கும், பீடச் சிறுவனாகப் பணி செய்வதற்கும். பிற்காலத்தில் குருவாக திருப்பலியை மிகுந்த தயாரிப்போடு கொண்டாடுவதற்கும் துணைபுரிந்தன. நான் படித்த பள்ளி, கல்லூரி, குருமடம் எனக்கு விசுவாச பயிற்சியைக் கொடுத்தன. ஆனால் உயிருள்ள விசுவாசத்தை என் குடும்பத்தில், எனது பெற்றோர்களிடத்தில்தான் நான் கற்றுக்கொண்டேன்” என்று தனது அனுபவப் பகிர்வை முடித்தார்.

### குடும்பம் - ஒரு குட்டித் திருஅவை

இரண்டாம் வத்திக்கான் சங்கம் குடும்பத்தை ஒரு குட்டித் திரு அவை என்று அழிக்கின்றது. காரணம் ஒவ்வொரு குடும்பமும் திருஅவையின் சாயலாகவும், அதன் பிரதிபலிப்பாகவும் இருக்கின்றது. திரு அவையின் ஒட்டுமொத்த செயற்பாடுகளும் குறிப்பாக நற்செய்தி அறிவிப்பு, மறைக்கல்வி, இறைவேண்டல் பகிரும் வாழ்வு போன்றவை குடும்பத்திலும் நிகழ்கின்றன. மேலும் ஒரு குழந்தைக்கு விசுவாசத்தைக் கற்றுக்கொடுக்கும் முதல் பாடசாலையாக குடும்பம் இருக்கின்றது. பெற்றோர்கள் தங்கள்



செயல்களாலும், முன்மாதிரிகையாலும் குழந்தைக்கு விசுவாசத்தைப் போதிக்கும் முதல் ஆசான்களாக இருக்கின்றார்கள். நற்செய்தி மதிப்பீடுகள் அங்கே விதைக்கப்படுகின்றன. தவறு செய்யும்போது தனது தவறை திருத்திக்கொள்ளவும், மற்றவர் தவறு செய்யும்போது மன்னிக்கவும், தன்னிடம் இருப்பதை பிறரோடு பகிர்ந்து கொள்ளவும் குடும்பத்தில்தான் ஒரு குழந்தை கற்றுக்கொள்கின்றது.

மேலும் நம் கடவுள் ஒரு குடும்ப கடவுள். தந்தை மகன் தூய ஆவி என்று மூவொரு இறைவனில் குடும்பமாக வாழ்கின்ற கடவுள். படைப்பின் தொடக்கத்திலே ஆதாம் ஏவாள் குடும்பத்தைப் படைத்தார். தனது மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற ஆபிரகாமின் குடும்பத்தை அழைத்தார். தனக்கு வேண்டியவர்களை அரசராக, இறைவாக்கினராக குடும்பத்திலிருந்துதான் அழைத்தார். எகிப்திலிருந்து இஸ்ரயேல் மக்களை ஒரு குடும்பமாகத்தான் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் சென்றார். இறுதியாக தனது ஒரே பேறான மகனை குடும்பத்தில்தான் பிறக்கச் செய்தார். குடும்பத்தில்தான் புனிதம் பிறக்கின்றது. மனிதம் ஊற்றெடுக்கின்றது.

### இன்றைய குடும்பங்கள்

மாறிவரும் நவீன உலகில் இன்றைய குடும்பங்கள் பல்முனை தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றன. நுகர்வு கலாசார பிடியும், பணத்தின் மோகமும், போலி தனிமனித சுதந்திரமும், கணவன் மனைவிக்கு இடையே பிரமாணிக்கமின்மையும், இதனால் ஏற்படும் திருமண முறிவும், கருக்கலைப்பும் குடும்பத்தின் புனிதத்தையும், மாண்பினையும் சீர்குலைத்து வருகின்றன. “நவீன கலாசாரம்” என்ற பெயரில் சொந்த பந்தங்களை வெளியே அனுப்பிவிட்டு, தனிக் குடும்பங்களாக உறவின்றி இன்றைய குடும்பங்கள் தவிக்கின்றன. ஒரு காலத்தில் குழந்தைகளின் மழலை சத்தமும், தாய்மார்களின் கொஞ்சும் சத்தமும் வீடுகளில் கேட்டன. இன்று 24 மணி நேரமும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றது. அன்று தாத்தா, பாட்டிகள் நீதிநெறி கதைகளைச் சொல்லிக் குழந்தைகளைத் தூங்க வைத்தார்கள். இன்றோ அவை பாலியல் உணர்வுகளை தூண்டுகின்றன. வக்கிர உணர்வுகளை தட்டி எழுப்புகின்ற நிகழ்வுகளாக உள்ளன.

இந்நிலையில் கத்தோலிக்கக் குடும்பங்களில் அன்றிலிருந்து குடும்பச் செபமாலையும், குடும்ப விவிலிய வாசிப்பும் மற்ற கத்தோலிக்க பழக்க வழக்கங்களும் தொலைக்காட்சி தொடர்களில் தொலைந்து போய்விட்டன. சுருங்கச் சொல்லின். இன்றைய குடும்பங்கள் வாழ்க்கை நெறியை தொலைத்து, திக்குத்தெரியாமல் எங்கேயோ சென்று கொண்டிருக்கின்றன.

### குடும்ப மறைக்கல்வி – காலத்தின் கட்டாயம்

குடும்பத்தின் புனிதத்தையும், மாண்பையும் மீண்டும் குடும்பங்களிலே நிலைநாட்டவும், கத்தோலிக்க விசுவாசத்தை ஆழமாக வேரூன்றவும் குடும்ப மறைக்கல்வி இன்று காலத்தின் கட்டாயமாகின்றது. குடும்ப மறைக்கல்வி என்பது “ஒரு குடும்பத்தில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லா உறுப்பினர்களும் கத்தோலிக்க விசுவாசத்தை அறிந்து கொள்வதிலும், அவற்றில் வளர்வதிலும் ஒன்றாக சேர்ந்து எடுத்துக்கொள்கின்ற தொடர் பயிற்சியாகும்.” இத்தொடர் பயிற்சியில் பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு முதல் நற்செய்தியாளர்களாக திகழ்கின்றார்கள். அவர்களை விசுவாசத்தில் வளர்ப்பது அவர்களது தலையாய கடமையாகின்றது. பங்குத்தளம் அவ்விசுவாசத்தை வளர்க்கத் தேவையான சூழலையும், பயன்படுத்த தொடர் பயிற்சியையும் அளிக்கின்றது.

இவ்விருவரும் குடும்ப மறைக்கல்வியை வீரியமுள்ள விதத்தில் செயற்படுத்த கீழ்க்கண்ட பரிந்துரைகளை பின்பற்றலாம்.

### குடும்பத்தில்

பெற்றோர்கள் தங்களது நம்பிக்கை அனுபவங்களை (faith Experiences) பிள்ளைகளிடத்தில் பகிர்ந்து இறைவனின் பராமரிப்பை உணர்த்த வேண்டும். குடும்பச் செபமாலையை தினமும் குடும்பத்தோடு சேர்ந்து செபிக்க வேண்டும். உணவு உண்பதற்கு முன்பும், பின்பும் இரவில் படுக்கச் செல்வதற்கு முன்பும், காலையில் எழுந்த பின்பும், எல்லா வேலைகளையும் தொடங்குவதற்கு முன்பும் இறைவேண்டல் செய்ய வேண்டும் என்ற பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இரவு உண்ணும்போது குடும்பத்தோடு ஒன்றாகச் சேர்ந்து உண்ணப் பழக வேண்டும். இரவு உணவுக்கு முன்பு விவிலியத்தின் ஒரு பகுதியை வாசித்து அதன் கருத்துக்களை விவாதிக்க வேண்டும். இரவு நேரங்களில் குழந்தைகளுக்கு விவிலிய கதைகளைச் சொல்லி உறங்க வைக்க வேண்டும்.

குடும்ப நிகழ்வுகளான பிறந்தநாள், ஆண்டு விழாக்கள், சுபநிகழ்வுகள், அருளடையாளக் கொண்டாட்டங்கள் போன்ற நிகழ்வுகளை குடும்பத்தாரோடு சேர்ந்து கொண்டாட வேண்டும். அவ்வேளைகளில் குடும்ப வரலாற்றை குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டும். குடும்பத்தோடு ஞாயிறு திருப்பலியில் பங்குபெற வேண்டும். பெற்றோர்கள் அதற்கு ஊக்கம் கொடுத்து, முன்னுதாரணமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் ஏதாவது ஒரு பங்கு (ஆலய) பணியில் ஈடுபட வேண்டும் (உ.ம்: பீடச் சிறுவர், வாசகம் வாசிப்பவர், பாடகர்குழு, பக்திச் சபைகள்) அந்த அனுபவங்களை குடும்பத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு உண்டியலில் காணிக்கை செலுத்த பயிற்சி கொடுக்க வேண்டும். இது சிறுவயதிலே பகிரும் பண்பு வளர உதவி புரியும்.

➡ 15

# திருஅவையும் இணையமும்

இன்றைய நவீன மனிதனின் அன்றாட வாழ்வில் இணையம் (Internet) அவசியமானதொன்றாக மாறிவிட்டது. குழந்தைகள் விளையாடுவதற்கு இணையம் வேண்டும். மாணவர்கள் கல்வி கற்கவும் இணையம் வேண்டும். இளைஞர்களின் பொழுது போக்கிற்கும் இணையம் வேண்டும். இவற்றைத் தவிர அலுவலகங்கள் மற்றும் ஏனைய இடங்களில் வேலைகளைச் செய்யவும் இணையம் வேண்டும். முதியோர்கள் தங்களின் பொழுதைக் கழிக்கவும் இணையம் வேண்டும். சமையல் செய்யவும் பொருட்களை வாங்கவும் விற்கவும் இணையம் தேவை. செய்திகள் அனுப்பவும் பெறவும் இணையம் வேண்டும். இவ்வாறு பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். படுக்கையிலிருந்து எழும்போது மின்குமிழை ஒளிரச் செய்கின்றோமோ இல்லையோ இணையத்தை இயக்க மறந்து விடாமல் இல்லை. இதுதான் இன்றைய நிலமை. காலை எழுந்ததிலிருந்து உறங்கும் வரை செய்பவற்றை இணையத்தில் பரப்பும் வேடிக்கையும் இன்றைய காலப்பகுதியில் பரிதாப நிலையாக மாறிவிட்டது. இவ்வாறு இருக்கும்போது இணையத்தை திருஅவையிலிருந்து எவ்வாறு பிரித்துவிட முடியும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மறுமலர்ச்சியின்பின் திருஅவை இன்றைய தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் இணையத்தின் அவசியத்தை உணர்ந்துள்ளது. எனினும் இவற்றை கண்மூடித்தனமாக திருஅவை ஏற்றுக் கொள்ளவில்லை. இவற்றால் ஏற்படும் விபரீதங்களை அறிந்த வண்ணமே திருஅவை இன்றைய உலகில் செயற்படுகின்றது. மனிதர்களின் ஆன்மாக்களை மீட்கும் பொருட்டு நவீன சாதனங்கள் பயன்படுமானால் அவை நன்மைக்குரியவையே. இவற்றைப் பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு “வியப்புக்குரிய பல” (Inter Mirifica) தெளிவுபடுத்துகின்றது. எனவே என்னுடைய இந்தக் கட்டுரையின் நோக்கம், திருஅவையில் இணையத்தின் தாக்கங்கள் என்னவென ஆராய்வதே.

### சந்தர்ப்பங்களும் எதிர்பார்ப்புக்களும்

திருஅவையில் தகவல் பரிமாற்றம் கிறிஸ்து இயேசுவின் நற்செய்தியை முதன்மையாகவும் மையமாகவும் கொண்டது. நற்செய்தி மீட்பளிக்கும் இறைவாக்கின் நற்செய்தியாக உலகில் திகழ்கின்றது. இதன்மூலம் சமூகத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளவர்கள் தமக்கேற்றவாறு மீட்பளிக்கும் இறைவாக்காக நற்செய்தியை ஏற்றுக்கொள்கின்றனர். ஆதிமுதல் நற்செய்தி ஊடகத்தின் மூலம் பரப்பப்படாத. அவ்வூடகம் வாய்மொழியாகவோ, நூல்களாகவோ, செயல்களாகவோ இருந்தன. ஆனால் நவீன கண்டுபிடிப்புக்களின்பின் ஊடகம் இலத்திரனியல் ஊடகமாக பரிணாமம் பெற்றது. எவ்வகையாயினும் நற்செய்தி பரப்புதலுக்கு ஓர் ஊடகம் அவசியம். எப்பொழுது இணையத்தின் பயன்பாடு மக்களிடையே அதிகரித்ததோ அன்றிலிருந்து நற்செய்தி பறைசாற்றுவதில் இணையத்தின் பயன்பாடும் திருஅவையில் அதிகரித்தது.

இன்றைய இலத்திரனியல் ஊடகங்கள் நற்செய்தியைப் பரப்பினாலும் இணையத்தின் மூலம் இப்பணியானது அதிதுரிதமான முறையில் சமயம் தொடர்பான விடயங்களை அணுகக்கூடியதாக உள்ளது. அதாவது, ஆன்மீகம் தொடர்பான வளங்களை இலகுவாக அணுகக்கூடியதாக உள்ளது. மிகச்சிறந்த கிறிஸ்தவ நூல்கள், கிறிஸ்தவ நூதனசாலைகள், கிறிஸ்தவ வழிபாட்டு ஸ்தலங்கள், திருஅவையின் படிப்பினைகளும், அங்கீகரிக்கப்பட்ட சுருளேடுகளும், அறிக்கை தொகுப்புக்களும் மற்றும் புனிதர்களின் நூல்களும், ஆவணங்களும் கிறிஸ்தவ படிப்பினையைத் தெரிவிக்கும் வளங்களாகும். இணையத்தின் மூலம் அதிதுரித முறையில் தகவல்களை அறியவும் திருஅவையின் இன்றைய நிலை பற்றி தெரிந்து கொள்ளவும் ஏதுவாக உள்ளது. இவற்றைத்தவிர இணையம் நற்செய்தி பரப்புதலுக்கும் மறைக்கல்விக்கும், ஆன்மீக வழிகாட்டுதலுக்கும் பயன்படுகின்றது. இவ்வகை வளங்கள் எம் புலன்களினால் உணரமுடியாமல் போனாலும் எம் ஆன்மிகத்தினை நெறிப்படுத்தும் உந்து சக்தியாகவும், விசுவாசத்தின் வித்துக்களாகவும் திகழ்கின்றன. இவ் இணையத்தினை மிகவும் அதிகமாகப் பயன்படுத்தும் இளைஞர், யுவதிகள் இதன் மூலம் அதிகளவில் பயன்பெறுகின்றனர்.

சிலவேளைகளில், ஆலயங்களில் இருந்து வெகு தொலைவில் இருப்பவர்கள் கூட இவ்வகை இணையத் தகவல் பரிமாற்றம் மூலம் மறைக்கல்வியை கற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. எனவே, இவ் ஊடகத்தினை திருஅவை மக்களுடன் நெருங்கிய தொடர்புடைய ஊடகமாக ஏற்றுக்கொண்டுள்ளது. இணையத்தகவல் பரிமாறுதலில் உள்ள ஒரு பாரிய விழுக்காடு என்னவெனில் தம் தாய் மொழிகளில் ஆவணங்கள், செய்திகளை அறிந்துகொள்ள முடியாத நிலையே. ஏனெனில் மிக அதிகளவான விடயங்கள் ஆங்கிலம், இலத்தீன், இத்தாலி மொழி ஆகியவற்றில் வெளிவருவதனால் சாதாரண மக்கள் இவற்றைப் பயன்படுத்துவதில் ஒரு விழுக்காடு உள்ளது.

குறிப்பாக தமிழ் மொழியில் புத்தகங்கள் வெளிவந்த போதிலும் இணையத்தில் தமிழ் மொழியில் ஆவணங்கள், ஆன்மீக வளங்கள் வெளியாகுவதற்கு சில கால இடைவெளி காணப்படுகின்றது. இது ஒரு விதத்தில் பிரதிகூலமாகவே உள்ளது.

மேலும் இன்றைய காலத்தில் உள்ள கொடூரமான கவலையான விடயம் என்னவெனில் எந்தவொரு விடயமானாலும் சமூக வலைத்தளங்களில் பரப்புவது வழக்கமாக மாறியுள்ளது. நல்ல விடயங்களைப் பரப்ப வேண்டுமே ஒழிய தவறான, சமூக சீர்கேடுகளைத் தூண்டும் விடயங்களைப் பரப்புவதைத் தவிர்க்க வேண்டும். இதனைத் திருச்சபை சட்டம் 212 இவ்வாறு வழியமைத்துள்ளது. ●

மன்னார் மறைசாட்சிகளின் யூபிலி ஆண்டை முன்னிட்டு சிறப்புக் கட்டுரை

# மன்னார் மறைசாட்சிகள்

## மானிடவியல் கண்ணோட்டத்தில் சமூகவியல் வரலாற்று ஆய்வு

### – அருட்பணி. ம.க. அருள்பிரகாசம் –

இலங்கை வரலாற்றில் முதன் முதல் பெருநகரமாக வளர்ச்சியடைந்தது மாந்தைத் துறைமுக நகரமேயாகும். (எல்லாவல 1969 : 116-121) அத்துடன் **மிகத் தொன்மைவாய்ந்த பிரசித்தி பெற்ற சர்வதேச துறைமுகமாகவும் மாந்தை நகர் விளங்கியது. மாதோட்ட நன்நகரானது இரண்டு கொம்புடைய மாடுகள் (எருமை மாடுகள்) நிறைந்த பிரதேசமாகவும் தயிர், பால், நெய் போன்றவை தாராளமாகக் கிடைக்கக்கூடிய இடமாகவும், தேனும், நெல்லும் அரிசியும், மரக்கறிகளும் விளையும் பிரதேசமாக விளங்குகின்றது. இங்குள்ள காடுகளில் யானைகள், கரடிகள், மான்கள், காட்டுப் பன்றிகள் நிறைய காணப்படுகின்றன. மரங்களில் பழுக்கின்ற பழங்களை இப்பிரதேசவாசிகள் உண்டு வாழ்ந்தனர் என ரிறினிடாடே என்னும் போத்துக்கேய வரலாற்றாசிரியர் கூறுகின்றார். (பவுலோ டா ரிறினிடாடே (**மொழி பெயர்ப்பு): எட்மண்ட் பீரீஸ்: 1972:192) வன்னி மாதோட்டப்பகுதிகளில் ஒரே குழுமத்தைச் சார்ந்தவர்களே முதலில் திருமுழுக்குப் பெற்றிருந்தனர். (பேணியோலா : 1983:213-214) இம்மக்கள் தமது வயல் நிலங்களுக்கு நீர் பெறுவதற்குரிய குளங்களுக்கருகிலே வாழ்ந்தனர். (பேணியோலா:2009:6) இங்குள்ள எல்லாக் கத்தோலிக்கர்களும் பிரான்சிஸ்கன் குருக்களினாலே மனமாற்றப்பட்டவர்களாகும். குறிப்பாக அருட்தந்தை பெற்றாங்கோ 'கண்ணாடி சுவாமி' என்பவரால் இப்பிரதேசத்தில் பல ஆலயங்கள் கட்டப்பட்டன.

மன்னார் தீவு 18 மைல் நீளமும், 2 மைல் அகலமும் உடையது. இது மிகவும் சிறிய தீவாக இருந்தாலும் இலங்கை வரலாற்றில் அதற்கொரு முக்கிய இடமுண்டு. இதன் பூர்வீக வரலாறும் சிறப்புடையதாகக் காணப்படுகின்றது. பல சந்தர்ப்பங்களில் இந்தியாவைக் கைப்பற்றிய வெளிநாட்டவர்கள் மன்னார் தீவினூடாக இலங்கையை வந்தடைந்துள்ளார்கள். இலங்கைக்கும், இந்தியாவிற்கும் தொடர்பை ஏற்படுத்துவது மன்னார்த் தீவென்றே கூறவேண்டும். திராவிட மக்கள் பழங்காலம் தொடக்கம் இலங்கையில் வாழ்ந்தனர் என்பதற்கு மன்னார் மாதோட்ட வரலாறே எடுத்துக்காட்டாக அமைகின்றது. சங்ககாலம் தொடக்கம் மன்னாருக்கும் தென்னிந்தியாவிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது என்று சங்க இலக்கியமாகிய அகநானூறு கூறுகின்றது.

தமிழர்கள் ஆரம்பகாலத்தில் கப்பலோட்டிகளாக கடற்பிரையாணம் செய்யும் மக்களாக இருந்தனர். இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே நீண்டகாலம் நடைபெற்ற வாணிபத் தொடர்பால் பழங்குடி மக்கள் காலத்திற்குக்காலம் மன்னார் மாதோட்டப் பகுதிகளுக்கு வந்து குடியேறினர். பூர்வீக கப்பலோட்டிகள் (Ancient Navigators) மன்னார்த்தீவிற்கும், தனுஸ்கோடிக்கும் இடையால் அமைந்துள்ள மாதோட்டத்துறையை வந்தடைந்தனர். இவ்வாறு காலத்துக்குக்காலம் பழங்குடி மக்களாகிய நாகர் (தமிழர்) மன்னார்த்தீவிலும், மாதோட்டத்திலும் குடியேறி மாதோட்டத்தைத் தலைநகராகக் கொண்டு தமிழ்ப்பிரதேசங்களை ஆண்டு வந்தனர் என்று முதலியார் இராஜநாயகம் தனது **'புரதான யாழ்ப்பாணம்'** என்னும் நூலில் கூறுகின்றார்.

**தொடர் – 2**

இராமபிரான் சீதையை மீட்க இலங்கைக்கு வந்தபோது கடல்நீர் காரணத்தால் தாம் அணிந்திருந்த ஆடைகளை மன்னிக் கொண்டு வந்த மகளிர் குடிகொண்ட பூமி மன்னார் எனப்பட்டது என சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். **'மன்'** என்பது அரசன் **'ஆர்'** என்பது பூமி. அதாவது மக்கள் குடியேற்றமில்லாத பூமியாக இருந்தபடியால் மன்னார் அதாவது அரசனுடைய பூமி எனவும் அழைக்கப்பட்டதாக சிலர் கூறுவர். அத்துடன் அராபியர்கள் சில காலம் குடியேறி வாழ்ந்தனர் என்றும் மன்னாரில் காணப்படும் பெருக்க மரத்தை அவர்கள் தமது ஒட்டகங்களுக்கு உணவு கொடுக்க கொணர்ந்து நாட்டினர் எனவும் அறியமுடிகின்றது. தமிழ்நாட்டின் தூத்துக்குடிக் கரையிலிருந்து **குருகுலத்தைச்** சேர்ந்த தமிழர்கள் முத்துக்குளிப்பிற்காகவும், கடற்தொழிலுக்காகவும் இலங்கையின் மேற்குக் கரையோரங்களில் குடியேறினர். நீர்கொழும்பில் இன்றுள்ள பரதகுலத்தவர்கள் இவ்வாறு குடியேறியவர்களின் வழித்தோன்றல்களாகும். (சின்னத்தம்பி: தமிழீழம் :பக்.9) மன்னார்த்தீவில் இரண்டு பட்டணங்கள் இருந்ததாக ஹென்றிக் ஹென்றிக்கஸ் அடிகளார் கூறுகின்றார். இந்தியக் கரையோரங்களிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் **சந்தோம் பட்டணம்** என்று அழைக்கப்பட்ட தற்போது எருக்கலம்பிட்டி என்று அழைக்கப்படும் இடத்தில் குடியேறினர். அடுத்த பட்டணம் என்பது **'பட்டிம்'** அதாவது பட்டித்தோட்டத்தைப் பற்றியே குறிக்கின்றதாகவும் தெளிவுபடுத்துகின்றார். *''கோட்டைக்கு அரை மைல் தூரம் ஒரு கிராமம் இருக்கின்றது. அவர்கள் பட்டிம் என்று அழைக்கின்றார்கள். நாங்கள் இத்தீவுக்கு வருவதற்கு முன்னரே கிறிஸ்தவர்களாக மாறிய இத்தீவைச் கத்தோலிக்கர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். நாங்கள் இத்தீவிற்கு வந்தபோது அவர்கள் இத்தீவில் இருக்கவில்லை. அரசனால் பல்வேறு வகையிலே துன்புறுத்தப்பட்டதனால் அவர்கள் அவ்விடத்தை விட்டு வேறிடம் சென்றிருந்தனர். இப்பொழுது அவர்கள் அவ்விடத்திற்கு வந்துவிட்டார்கள். ஒரு குருவானவர் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் வந்து திருப்பலி நிறைவேற்றி ஒருநாள் முழுவதும் பட்டித்தோட்டத்தில் தங்கி பணியாற்றிவிட்டுச் செல்கின்றார். ஆற்றுக்கு அப்பாலுள்ள இடத்தைச் சேர்ந்தவர்களும் இவ்விடத்திற்கு நாங்கள் வருவதற்கு முன்னரே வந்து விட்டார்கள். அவர்கள் தங்களுடைய உறவினர்களிடமே வந்து சேர்ந்து இப்போது திருமுழுக்குப் பெற்றுள்ளார்கள். புதிதாக இப்போது திருமுழுக்குப் பெற்றவர்கள் மொத்தம் 200 பேராகும்.''* (கடிதம்: அருட்தந்தை ஹென்றிக் ஹென்றிக்கஸ் :1561) இயேசுவின் சீடர்களுள் ஒருவரான **தோமையார்** இலங்கையில் வந்து சத்தியமறையைப் போதித்தார் என்பதற்கு மன்னார்த்தீவே ஆதாரமாகவுள்ளது. மன்னார்த்தீவின் ஒரு பகுதி சந்தோம் பட்டணம் என அழைக்கப்பட்டதாக ஒரு வரலாறும் உண்டு. இவ்வாறு பல வரலாற்று அம்சங்களைக் கொண்டதாக மன்னார்த்தீவும் மாதோட்டமும் விளங்குகின்றது.

#### 1.1 மாந்தை நகர்

மாந்தையானது இலங்கையில் முதன் முதல் உருவாகிய துறைமுக நகர் என்றும் முதல் நாகரிகமடைந்த மக்கள் வாழ்ந்தனர் என்றும் நகர கட்டமைப்பு முறையாகக் கட்டப்பட்டதென்றும் கூறுவதோடு அதாவது வீடுகள் அமையும் இடம், பிரதான பாதைகள், கடைத்தொகுதிகள் எவ்விடம் அமையவேண்டும் அரன்மனை மாளிகைகள் எப்படி அமைக்கவேண்டும், கடல் வாணிபம் எப்படி மேற்கொள்ள வேண்டும், விவசாய நிலங்கள் எங்கு அமைக்கப்பட வேண்டும் எனத் திட்டமிடப்பட்டு இம் மாந்தை நகர் அமைக்கப்பட்டதாகவும், மாந்தை அரசின் எல்லை புத்தளம்வரை செல்வதாகவும் மேலும் மாந்தை தொன்மைவாய்ந்த சர்வதேச துறைமுகம் எனவும் எல்லாவல என்னும் வரலாற்று சமூகவியல் ஆய்வாளர் தனது **'Social history of Early Ceylon'** (எல்லாவல 1969 : 116-121) என்னும் நூலில் வெளிப்படுத்தியுள்ளார். முதல் முதல் உருவாக்கப்பட்ட மாதோட்ட அரசானது வரலாற்றில் நீண்ட காலம் நிலை பெற்ற அரசாகும்.●

*(அடுத்த இதழில் தொடரும்)*

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# 200வது யூபிலி ஆண்டை நோக்கி

## போர்டோவின் திருக்குடும்ப சபை - வரலாற்றுப் பார்வை

**அருட்சகோதரி. லூமினா போல்ராஜா**
**திருக்குடும்ப கன்னியர் சபை**
**தொடர் – 1**

போர்டோவின் திருக்குடும்ப சபை 1820இல் ஐரோப்பாவிலுள்ள பிரான்ஸ் தேசத்தில் வித்திடப்பட்டு ஆழமாக வேரூன்றி, பல் திசையும் கிளைகள் பரப்பி பாரிய விருட்சமாக ஆசியா, ஆபிரிக்கா, வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா என்று விரிந்து, வளர்ந்து கனிகொடுத்து வருகின்றது. 1820இல் தடம்பதித்த எம் சபை 2020இல் தன் 200வது ஆண்டை நன்றியுணர்வுகளுடன் எதிர்நோக்க காத்திருக்கின்றது. இதை நினைவுகூரும் நகர்வுகளில் ஒன்றாக எம் சபையின் வரலாற்றை உங்களோடு பகிர்வது சாலப் பொருத்தமானதாகும்.

### யூபிலி ஆண்டு அறிமுகம்

மானிட வரலாற்றிலும், மீட்பின் வரலாற்றிலும் புரட்சிகள் வெடிப்பதும், குழப்பங்கள் ஏற்படுவதும் சிதறுண்டு பிரிந்து ஓடுவதும் புதியவையல்ல. இவை காலத்துக்குக் காலம் அரசியல், பொருளாதாரம். மதம், மொழி, நிலம் என்று பல்வேறு வடிவங்களில் சிறிதாகவும், பெரிதாகவும் உருவெடுப்பதும் நிஜங்களாகும். இவை மத்தியில் படைத்த பரம்பொருளாம் இறைவனின் தலையீடு உயர்ந்து நின்று, இவற்றைச் சீர்செய்ய காலத்துக்குக் காலம் அரசர்கள், நீதித் தலைவர்கள், இறைவாக்கினர்கள், நல்ல மனிதர்களைத் தேர்ந்தெடுத்து, தன் நோக்கை நிறைவு செய்யும் உன்னத கருவிகளாகப் பயன்படுத்தி வருவதும் கண்கூடான உண்மைகளாகும்.

இந்த வரிசையிலே மாநகராம் பிரான்சின் வரலாற்றிலே புரட்சி வெடித்தபோது நல்வரவாக மண்ணில் பூத்த வண. பீற்ற பியன்வெனு, புரட்சியின் விளைவாக ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு தன்னுணர்வு கொண்டார். செபத்தில் இறைசித்தத்தை உய்த்துணர்ந்தார். இறைகுடும்பம் சிதறுண்டு வழிமாறிச் செல்லும் நிலையைக் கண்டார். மக்களின் விசுவாசம் ஆட்டம் காணும் நிலையை உணர்ந்தார். சிதறுண்ட மக்களை ஒன்றிணைக்கவும், விசுவாசத்தில் உறுதிப்படுத்தவும், இவ்வுலக நிலையாமையை உணர்த்தி, நிலையான விண்ணரசின் விதைகளை விதைத்து இன, மத, நில, மொழி கடந்து படைப்பனைத்தையும் இறைகுடும்பமாக இணைக்க வேண்டிய அவசர தேவையை இனம் கண்டார். இறைதந்தையின் கனவாகிய "நாம் ஒன்றாயிருப்பதுபோல் எல்லோரும் ஒன்றாயிருப்பார்களாக" (யோவான் 17:11) என்ற மறைபொருளான திட்டத்தை நனவாக்க 1820ஆம் ஆண்டு போர்டோவின் திருக்குடும்ப சபையை நிறுவினார், திரித்துவத்தினதும், நசரேத்தில் வாழ்ந்த திருக்குடும்பத்தினதும், முதல் திருஅவையாக மலர்ந்த ஆதிக்கிறிஸ்தவ சமூகத்தினதும் ஒருமைப்பாட்டை, ஐக்கியத்தை தம் வாழ்வாக்கி, கால ஓட்டத்தின் தேவைகளுக்கேற்ப பணியாற்ற வேண்டும் என்ற தொலை நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட நம் நிறுவனம், தனது நீடிய பயணத்திலே 200 ஆண்டுகளின் மைல்



கல்லை எட்டியுள்ளது. காலத்தின் தேவைகளைக் கருத்திற் கொண்டு பல கிளைகளாக பணியாற்றிய எம் சபையின் அங்கத்தவர்களாகிய நாம், இன்று ஐந்து அழைத்தல்களாக அப்போஸ்தலிக்க, தியானயோக, திருசார்பற்ற, குருக்கள், பொதுநிலையினரை உள்ளடக்கி ஒரே குடும்பமாக இறையரசின் பணிகளைச் குடும்பங்களிலும், சமுதாயத்திலும், திருஅவையிலும் முன்னெடுத்து வருகின்றோம். குறைகள் - நிறைகள், வெற்றிகள் - தோல்விகள், புகழ்ச்சிகள் - இகழ்ச்சிகள், சவால்கள் மத்தியில் "படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்" (மாற்கு 16:15) என்ற இறைவாக்கிற்கேற்ப உலகின் பல பாகங்களிலும் மறைத்தூதுவர்களாக, ஏழைப் பயணிகளாக "இறைவன் மாத்திரமே, அவருக்கே மகிமை" என்ற மனஉறுதியுடன் இன்றுவரை பணியாற்றி வருகின்றோம். 200 ஆண்டுகளாக பயணிக்கும் நம் பாதையின் தடங்களை நினைவுகூரும் முகமாக, மூன்று வருடங்களை ஆயத்தக் காலங்களாக்கினோம். 2017ஆம் ஆண்டை இறைவன் எம்மீது பொழிந்த அபரிதமான ஆசீர்வாதங்களுக்காகவும், நன்மைத்தனங்களுக்காகவும் நன்றி கூறும் ஆண்டாகவும், 2018ஆம் ஆண்டை "இறைவன் மாத்திரமே, அவருக்கே மகிமை" என்ற எம் ஆன்மீகத்தைப் புதுப்பிக்கும் ஆண்டாகவும், அதனைப் பல்வேறு நிலையிலுள்ளவர்களோடு சிறப்பான நமது பிரசன்னம் இல்லாத தளங்களைச் சந்தித்து ஆன்மீகப் புதுப்பித்தலைப் பெற ஊக்குவித்தோம். 2019ஆம் ஆண்டிலே எம் வரலாற்றையும், அனுபவங்களையும் வார்த்தைகளால் எடுத்தியம்பவும், அவற்றை எழுத்துருவில் வடித்து விசுவாசத்தை உறுதிப்படுத்தவும் அழைக்கப்படுவதுடன், தூய யாக்கோபு கூறுகின்ற "நம்பிக்கை செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாகும்" (2:17) என்ற இறைவாக்கிற்கேற்ப வெளிப்படுத்தும் வார்த்தைகளுக்கும், அறிக்கையிடும் விசுவாசத்திற்கும் பதிலிருக்கும் முகமாக, அடிமட்டம் வரை இறங்கிப் பணிகளைத் தொடரவும் அழைக்கப்படுகின்றோம். 2020ஆம் ஆண்டை யூபிலியின் நன்றியின் ஆண்டாக நினைவுகூர இருக்கின்றோம். 1820 ஆண்டு திரித்துவ திருநாளன்று ஆரம்பிக்கப்பட்ட எம் சபை 2020ஆம் ஆண்டு திரித்துவ இறைவனின் திருநாளன்றே 200 ஆண்டுகளின் நிறைவை அடைகின்றது. இத்தருணத்தில் நமது ஸ்தாபகருக்கும், சபை ஆரம்பத்திற்கும் திரித்துவத்திற்கும் என்ன தொடர்பு என ஒரு கணம் சிந்திப்பது நல்லது.

எமது ஸ்தாபகர் திரித்துவ இறைவனின் மறைபொருளை ஆழமாகச் சிந்தித்து அவர்களின் தெய்வீகத்தை மண்ணகத்தில் வாழவும், வாழ வழிகாட்டவும் விரும்பினார். இவரின் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளும், இலட்சியக் கனவுகளும் திரித்துவ திருநாளிலேயே நிறைவேறுகின்றன. குறிப்பாக அவரின் குருப்பட்டம் திரித்துவத் திருநாளுக்கு முதல் நாளும், முதல் திருப்பலி திரித்துவத் திருநாளன்றும், திருக்குடும்ப சபையின் முதல் குழு ஆரம்பிக்கப்பட்டதும், முதற்குழு அங்கத்தவர்கள் மூவராக தெரியப்பட்டதும், முதற்குழுவின் அங்கத்தவர்கள் மூவரில் ஒருவரான தனது சகோதரிக்கு திரினிற்றி என்று பெயரிட்டதும் அவருக்குத் திரித்துவத்தின் மட்டில் இருக்கும் அன்பை, பற்றுறுதியை அவர்களோடு கொண்டுள்ள இறைஉறவை ஆழமாக வெளிப்படுத்துகின்றன.

வாழ்வின் ஊற்றாக விளங்கும் திரித்துவ இறைவனின் ஊற்றிலிருந்தே அனைத்தும் வழிந்தோட வேண்டும் என்ற ஆன்மீகத் தாகத்தோடு பயணித்த எம் ஸ்தாபகரின் வழியில் நாமும் பயணிப்போம். சிறப்பாக தற்போதைய எமது தாய் நாட்டின் நிச்சயமற்ற தன்மைகள், உலகின் எட்டுத் திசையிலும் இடம் பெறும் வன்முறைகள், அன்புக்கும், நீதிக்கும், ஒற்றுமைக்கும் முரணான சூழமைவுகள் மத்தியில் விசுவாசத்தை இழக்காது, உறுதியோடு பயணிக்க எம்மை முற்று முழுதும் கையளிக்க வேண்டிய அவசரத் தேவைகள், புதிய சவால்களாக உருவெடுத்துள்ளன. எனவே, காலத்தின் தேவைக்கேற்ப பணியாற்ற உருவாக்கப்பட்ட எமது நிறுவனத்தின் இலட்சிய எதிர்நோக்கை சிரம்மேற்கொண்டு "முன்னேறிச் செல்லுங்கள், உங்களைத் தடை செய்வது எதுவுமில்லை" என்ற எம் ஸ்தாபகரின் உற்சாகமூட்டும் வார்த்தைகளை மனக்கண்முன் கொண்டு ஆன்மீக வாஞ்சையுடனும், வீரத்துவத்துடனும் பயணிக்கின்றோம்.●

*(அடுத்த இதழில் தொடரும்)*

**திருக்குடும்ப சபையின் யூபிலி ஆண்டை முன்னிட்டு சபையின் வரலாற்றுப்பதிவுகள் தொடராக மன்னாவில் வெளிவரும்.**

# சிறுக்கண்டல் புனித அந்தோனியார் நாடகம்

சிறுக்கண்டல் புனித அந்தோனியார் இரு இரவு நாடகம் கடந்த 07ஆம், 8ஆம் திகதிகளில் சிறுக்கண்டல் புனித அந்தோனியார் ஆலய வழாகத்தின் முன் வயல்வெளியில் திறந்த அரங்கத்தில் பங்குத்தந்தை அருட்பணி. எல். ஞானாதிக்கம் அடிகளார் தலைமையில் பங்குக் கலைஞர்களின் முழமையான ஈடுபாட்டோடும்பங்குமக்களின் ஆதரவோடும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இன் நிகழ்விற்கு முதன்மை அதிதியாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் கலந்து சிறப்பித்தார். 15






















# குஞ்சுக்குளம் பங்கில்

## புதிய பங்குப்பணிமனை திறந்து வைக்கப்பட்டது





கடந்த 17.07.2019 புதன்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் பெரிய குஞ்சுக்குளம் பங்கின் புதிய பங்குப்பணிமனையினை ஆசீர்வதித்து திறந்து வைத்தார்.

இத்திறப்பு விழாவில் ஏராளமான அருட்பணியாளர்களும், பங்குமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்கள். பங்குத்தந்தை அருட்பணி. றொணிஸ் வாஸ் அடிகளார் ஆயர் இல்லத்தின் முழுமையான நிதி உதவியுடன் புதிய பங்குப்பணிமனையை அழகாக அமைத்துள்ளார்.

இவ் அழகிய இல்லத்தை வடிவமைத்த பங்குத்தந்தைக்கும், பங்குத்தந்தையோடு உடனுழைத்த அதைத்து உள்ளங்களுக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக நன்றிகளையும், இறை ஆசீர் நிறைந்த வாழ்த்துக்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.



# புத்தக வெளியீடு

## அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகுஅடிகளாரின் ‘கொழுந்து’




அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளாரின் கொழுந்து” கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா கடந்த 18.05.2019 சனிக்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு பேசாலையில் இயங்கிவரும் மூவிராசாப்பட்டினம் கலைப்பட்டறையின் ஏற்பாட்டில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கவிதைத் தொகுப்பின் படைப்பாளர் அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளார் தற்பொழுது புலம்யெர் தமிழ் மக்கள் மத்தியில் சுவிஸ் ஆன்மீகப் பணியகத்தில் இறைபணியாற்றி வருகின்றார். எழுத்துலகில் இன்னும் பல சாதனைகளைப் படைக்க மன்னா சார்பாக வாழ்த்தி நிற்கின்றோம்.




## அப்போஸ்தலரான புனித பேதுரு சபை

1889ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் கேன் என்னும் நகரில் ஜான் பீகார் என்ற பெண்மணியால் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் இறையரசைக் கட்டியெழுப்ப ஒளியாகத் திகழ வேண்டிய குருக்களையும், துறவற சபையினரையும் பயிற்றுவித்து உருவாக்கவும், இவர்கள் வாழ்வை வளப்படுத்தத் தேவையான சகல உதவிகளையும், குருமடங்களுக்கும், துறவறசபை இல்லங்களுக்கு வழங்கவும் இறை அழைத்தலைப் பெருக்கவும், அதி விஷேடமாக சுதேச குருக்களை உருவாக்கவும், செபத்தாலும், பரித்தியாகத்தாலும் ஒத்துழைப்பை வழங்கி, திருச்சபைக்கு உதவிக்கரத்தை நீட்டுவதே அதன் நோக்கம் ஆகும்.

# நீங்காத நினைவுகள்

### 06ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14-12-1949 — உதிர்வு 21-07-2013

**திருமதி. ஜெபநேசன் விக்ரோறியாள்**

(மாந்தை மேற்கு ப.நோ.கூ. சங்கத்தின் முன்னாள் தலைவி, ஓய்வுபெற்ற மாந்தை மேற்கு பிரதேசசபை உத்தியோகத்தர்)

(காத்தான்குளம், வட்டக்கண்டல்)

அன்போடு அள்ளித்தந்து அரவணைத்தீர்கள்.
எம்மை ஆறாத்துயரில் தவிக்கவிட்டு
ஆறுதல்தேடி சென்றுவிட்டீர்களே அம்மா!
வருடம் ஐந்து ஆனதம்மா ஆறவில்லை எம் காயம்.
அன்போடு எமைக்காத்து அறிவுரைகள் பல கூறி
பண்போடு எம்மை உம் கண்ணுக்குள் வைத்து வளர்த்து
பாரினிலே உயரவைத்தீர்கள்.
கண்ணீர் நாம் வடிக்க எங்கு அம்மா போய் மறைந்தீர்?
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
கணவன், மகன், மகள், மருமகன், மருமகள், பேத்தி.

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 06-12-1936 — உதிர்வு 21-06-2019

**திருமதி. கபிரியல் லூக்கம்மா**

(தேக்கவத்தை, வவுனியா)

குடும்பத்தின் குத்துவிளக்காய், அன்னையாய், தந்தையாய், சகோதரியாய், குலதெய்வமாக வாழ்ந்து காட்டியவள் என் தாய் லூக்கம்மா! அம்மா என்ற சொல்லுக்கு அர்த்தம் தந்தாள், எங்களைப் பாசத்துடன் அரவணைத்தாள் என் தாய் லூக்கம்மா! அன்புடனே எம்மை வரவேற்று விருந்தோம்பல் தந்து எங்களை வாழ வைத்த அன்புத் தெய்வம் என் இனிய அம்மாள் லூக்கம்மா! மெழுகாய் உருகி ஒளி தந்து சுக துக்கத்தைப் பகிர்ந்து பாசத்தையும், நேசத்தையும் விதைத்த அன்பின் உருவமே என் அன்னை லூக்கம்மா! எண்ணத்தில் எம்முடனே என்றும் வாழும் - நீ விண்ணுலகில் என்றும் வீற்றிருப்பாய் மதிப்புடனே

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர்

### 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 09-04-1928 — உதிர்வு 21-07-2004

**திருமதி. பாவிலு சந்தாக்குட்டி**

(முருங்கன் கமம், முருங்கன்)

அம்மா.... பண்பு நிறை உம் செயலால்
பார்போற்ற வாழ்ந்து நின்றீர்!
குறைகாணா உம் குணத்தால்
குவலயத்தில் சிறந்து நின்றீர்!
எளிமையாய் பிறந்த போதும்
ஏழ்மையை அணிந்து நின்றீர்!
பிள்ளைகள் எமை உயர்த்த
நித்திரையை நீர் மறந்தீர்!
உதிரத்தில் கலந்து விட்ட
உத்தமியாம் உமைப் பிரிந்து
பல்லாண்டு பூர்த்தி என்ற உண்மை எமை உலுக்குதம்மா...!

**பிரிவால் நினைந்துருகும்,** மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 09-10-1951 — உதிர்வு 06-06-2019

**திரு. சிமியோன் சந்தான் பாலா**

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர், மாவிலங்கேணி, முருங்கன்)

உங்கள் அன்பு நண்பர்களோடு, அருமை மகனோடு, உங்கள் உடன் பிறப்புக்களோடு, மருமக்கள் நீங்கள் உயிராய் நேசித்த உங்கள் பேரப்பிள்ளைகளோடு, இணைந்து நீங்கள் வாழ்ந்த பெறுமதி மிக்க வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி சொல்கின்றேன். நாற்பத்து மூன்று வருட இல் வாழ்வின் ஒவ்வொரு நாளுக்கும் நன்றி. இறை இயேசுவுக்கும், உங்களுக்கும் இறைவன் அமைதி தரட்டும் இருவருக்கும்.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி, ஜெயா

### 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 30-11-1971 — உதிர்வு 09-07-2018

**திருமதி. தியோஜினி யோண்பிள்ளை மாலின்**

பறப்பாங்கண்டல்)

நித்தமும் உங்கள் நினைவலைகள் - எம்
நெஞ்சத்தில் இருக்கும்மா - உம்
சிறகுக்குள் எமைமூடி
பாரினில் எமை பாரமுடன் வளர்த்தாயே அம்மா
விண்ணகம் சென்று
ஓராண்டு நினைவிலே - உம்
ஆன்மா இறைவன் திருப்பாதம்
இளைப்பாற நித்தமும்
வேண்டுகின்றோம். அம்மா

**பிரிவால் நினைந்துருகும்,**
கணவன், பிள்ளைகள், பெற்றோர் மற்றும் சகோதரர்கள்.

### 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15-07-1982 — உதிர்வு 02-07-2014

**திரு. தோமஸ் ஸ்ரீபன் (வசந்தன்)**

(தட்சனாமருதமடு, பாலம்பிட்டி மடு)

அன்பிற்கு இலக்கணமாய், பாசத்தின் பிறப்பிடமாய்
முகத்தில் புன்னகையுடன் பாரில் நீர் வாழ்ந்தீரே - ஸ்ரீபன்
பாதியில் இறைவன் தன்னுடன் அழைத்தாரோ?
மறைந்து ஆண்டு ஐந்து நிறைவதின்று கனவா?
கண்ணுக்குள் நிற்கின்றாய் கனவிலே வருகின்றாய்
கண்ணீருக்குள் எம்மை யெல்லாம்
கலங்கிடவே வைக்கின்றாய்
எண்ணத்தில் எம்முடனே என்றும் வாழும் - நீ
விண்ணுலகில் என்றும் வீற்றிருப்பாய் மதிப்புடனே

**பிரிவால் நினைந்துருகும்,**
அம்மா, அப்பா, சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளை



# மாணவர் மன்னா



## விவிலிய வினாவிடைப் போட்டி இல: 12
## [திருத்தூதர் பணி 20 - 28 வரை]

### போட்டி விதிகள்

1. விடைத்தாளிலே விடைகளை எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. உங்கள் விடைகளை 01.09.2019ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஷ்டசாலிகளுக்குப் பரிசுத்தொகை அனுப்பிவைக்கப்படும்.
3. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம். (தரம் - 3 முதல் தரம் 12 வரை)
4. முழுமையாக சரியான விடைகளை எழுதுவோரின் பெயர்கள் மட்டும் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
5. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்விகற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
9. “விவிலிய வினாவிடைப் போட்டி - 12”, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

**புதிய அலுவலக விலாசம்:**
மன்னா பத்திரிகை அலுவலகம்,
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.



### விவிலிய வினாக்கள்

01. யூதேயாவில் இருந்து வந்த இறைவாக்கினர் பெயரென்ன?
02. ஆயிரத்துவத் தலைவர் பவுலைப்பிடித்து எத்தனை சங்கிலிகளால் கட்டும்படி ஆணை பிறப்பித்தார்?
03. ஆண்டவர் பவுலை எழுந்து எங்கு போகும்படி சொன்னார்?
04. நீர் ஓர் உரோமைக் குடிமகன்தானா என்று பவுலிடம் கேட்டது யார்?
05. பவுல் வெள்ளை அடிக்கப்பட்ட சுவரே கடவுள் உம்மை அடிப்பார் என்று யாரைக் குறித்துச் சொன்னார்?
06. பவுல் பேசுமாறு அவருக்கு சைகை காட்டியது யார்?
07. பவுல் இனியும் உயிரோடு இருக்கக் கூடாது என்று கூச்சல் இட்டவர்கள் யார்?
08. இயேசுக் கிறிஸ்து பவுலிடம் யார் யார் மத்தியிலிருந்து விடுவிப்பேன் என்று கூறினார்?
09. பவுலை மனித நேயத்துடன் நடத்திய மனிதன் யார்?
10. அலச்சாந்திரியாவைச் சார்ந்த கப்பலில் என்ன சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது?

### விவிலிய வினாவிடைப்போட்டி இல. 10 இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
இ. ஆன் குயின்சி
தாழ்வுபாடு வீதி,
மன்னார் பேராலயப்பங்கு

**இரண்டாம் பரிசு:**
வி. மேரி சதுசா,
மூன்றாம்பிட்டி,
வெள்ளாங்குளம்,
தேவன்பிட்டிப்பங்கு

**மூன்றாம் பரிசு:**
M.J. யூட்சினி றெவல்,
அக்கினேஸ்புரம்,
வங்காலைப்பங்கு

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 65 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 58 பேர்.**

01. S. லினுக்ஷி, பதுளைப்பங்கு.
02. சை. யேசுதாசன், கட்டைக்காட்டுப்பங்கு.
03. R. ஜியோசனா, வேப்பங்குளப்பங்கு.
04. S. டெல்சினா, கட்டைக்காட்டுப் பங்கு.
05. செ. மரியறூபன், அடம்பன் பங்கு.
06. ம. சாளினி, ஆட்காட்டிவெளிப்பங்கு.
07. கு. ஆன் சினேகா, கட்டைக்காட்டுப்பங்கு.
08. செ. மரிஸ்ரெலா, அடம்பன்பங்கு.
09. அ. மரிய சுவேற்திரா, எழுவைத்தீவுபங்கு.
10. கி. மேரி கீர்த்திகா, எழுவைத்தீவுபங்கு.
11. யோ. ஜெரோஷா லெம்பேட், பெரிய பண்டிவிரிச்சான்பங்கு.
12. ஏ. ஸ்ரெபான் லெம்பேட், வங்காலைபங்கு.
13. வி. ஆன் றக்ஷனா, வஞ்சியங்குளம்பங்கு.
14. எ. அன்ரனற் ஜெபர்சனா, வஞ்சியங்குளம்பங்கு.
15. றெ. லெயூமி, உயிலங்குளம்பங்கு.
16. யோ. அபிஷா, உயிலங்குளம்பங்கு.
17. R. இன்பநிதி பசிலிக்கா, பேராலயப்பங்கு.
18. G. குகலாஷினி, பண்டாரவளைப்பங்கு
19. J. பிறின்ஸன் ஜோ பீரிஸ், பேராலயப்பங்கு.
20. C. ஏஞ்சலோ, உயிலங்குளப்பங்கு.
21. ம. டெரீனா, வேப்பங்குளப்பங்கு.
22. ம. திருசாளினி, வேப்பங்குளப்பங்கு.
23. சா. டிலுஜன், பறப்பாங்கண்டல்பங்கு.
24. ஆ. அஸ்மிலா, தட்சனாமருதமடுப்பங்கு.
25. ம. டிஷாமினி, வேப்பங்குளப்பங்கு.
26. G. குயின்சி, உயிலங்குளப்பங்கு.
27. பீ. கெவின் பிகிறாடோ, தேவன்பிட்டிப்பங்கு.
28. R. கிரணியா குலாஸ், வங்காலைப்பங்கு.
29. S. பிறேமியா குரூஸ், முத்தரிப்புத்துறைபங்கு.
30. ப. வைலற் புறோமி, முருங்கன்பங்கு.
31. R. கோவலஸ்ரா, வங்காலைப்பங்கு.
32. ச. கனியூட்டா, பொன்தீவுகண்டல்பங்கு.
33. அ. ஆன் சோபிக்கா, வஞ்சியங்குளப்பங்கு.
34. N. ஹனிசியஸ், பறப்பாங்கண்டல்பங்கு.
35. து. ஸ்வேதா, சிலாவத்துறைப்பங்கு.
36. கோ. வின்சலா, தோட்டவெளிப்பங்கு.
37. சா. லிஷான், பறப்பாங்கண்டல்பங்கு.
38. சா. சன்சிக்கா, பறப்பாங்கண்டல்பங்கு.
39. ஜெ. ஆன் பிறித்திக்கா பீரிஸ், பேராலயப்பங்கு.
40. கொ. லொசின்ரன் பறுனாந்து, முத்தரிப்புத்துறைப்பங்கு.
41. தே. அன்புக்குமரன், ஆட்காட்டிவெளிப்பங்கு.
42. கா. அக்ஷயா, பெரிய பண்டிவிரிச்சான்பங்கு.
43. ஜெ. ஜெயந்தி நிலோசிக்கா, கட்டைக்காட்டுப்பங்கு.
44. N. டனுசியா மேரி, தலைமன்னார்ப்பங்கு.
45. தி. அ. ஜதுர்ஷன், உயிலங்குளப்பங்கு.
46. எ. கொண்ஸ்ரன், இலுப்பைக்குளப்பங்கு.
47. O. ரெஷ்மிகா, பண்டாரவளைப்பங்கு.
48. J. றஸ்மினா, தரணிக்குளம்பங்கு.
49. அ. மேரி அனோலின், கட்டைக்காட்டுப்பங்கு.
50. K. லூட்ஸ் வேளினி, தாழ்வுபாடுபங்கு.

# வலியில் விளைந்த அன்பு

## – அருட்பணி. C.J. அன்ரனி பாலா –

உலகம் முழுவதும் எவ்வேளையிலும் கத்தோலிக்கத் திருச்சபையின் பலிப்பீடங்களில் நிறைவேறுகின்ற இயேசுவின் வாக்குறுதி “இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்.” (மத் 28:20) கடவுளே மனிதர்களாகிய எமக்காக இரத்தம் சிந்தினார். கடவுளே, மானிடர் நம் ஆன்மீக உணவாக தன்னைச் சாப்பிடும்படி எமக்குத் தந்துள்ளார். இவ்வுலகில் இறுதி மனிதன் பாவம் செய்யும் வரை இயேசுவில் நம்பிக்கை வைக்கும் எவருக்கும் “கடவுள்” உணவாகின்றார். ஏனென்றால் எமது பாவங்கள் அவ்வளவு கொடுமையானவை, கொடூரமானவை. இது கத்தோலிக்கத் திருச்சபையைத் தவிர வேறு சபைகளிலோ, மதங்களிலோ இல்லை. மனிதர்களாகிய எம்மேல் இறைவனின் அன்பு இவ்வளவு தூரம் ஆழமானதொன்றால் அவரை உட்கொள்ளும் கத்தோலிக்கர்களாகிய நாம் அவருக்குக் காட்டும் பதிலன்பின் சாட்சிய வாழ்வு எவ்வாறு அமையவேண்டும்? ஒவ்வொரு முறையும் ஆலயத்திற்குள் நாம் செல்லும்போது, நமது உடல் தூய ஆவியார் வாழும் ஆலயம் என்பதை நினைவிற் கொண்டு, முதன்முதலாக நற்கருணை ஆண்டவர்முன் நெற்றி நிலத்தில்பட “நித்திய ஸ்துதிக்குரிய…” சொல்லிச் சிலுவை அடையாளம் வரைந்து அடக்க ஒடுக்கத்தோடு எந்தவித கவனக் குறைவோ பராக்கோ இல்லாமல் எவரையும் பார்க்காமல் நற்கருணையின் முன்பாக எமக்குரிய இடத்தில் முழந்தாழிட்டுச் செபத்தில் ஒன்றிக்க வேண்டும் என்றும் ஆலயத்தைவிட்டு வாழ்க்கைக்கு வரும்போதுகூட அடக்க ஒடுக்கம், மரியாதை, தூய்மை, தாழ்ச்சி, பணிவு, கீழ்ப்படிவு எமது அழைப்பிற்குப் பிரமாணிக்கம் போன்ற பண்புகளுடன் சக மனிதர்களிடையே வாழ வேண்டும் என்றும் அனிற்றா பிரான்சிஸ்கா என்னும் பெண்களுக்கெழுதிய மடலில் புனித பியோ அடிகள் கூறுகின்றார். புனித பியோ அடிகளாரின் திருப்பலியில் பங்குபற்றிய ஒருவர், “புனிதர் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் வேளை பலிப்பீடத்திற்கும், கல்வாரி மலைப் பீடத்திற்கும் இடையில் உள்ள தூரம் குறைகின்றது” என்று கூறுகின்றார்.

ஏனெனில் இயேசுவின் திருவுடல் திருஇரத்தம் இறைவனின் உண்மைப் பிரசன்னமாகும். இயேசுவை பலிப்பீடத்திலே கொண்டுவருபவர் பாவப் பொறுத்தல் அதிகாரம் பெற்ற குருவாகும். இறைவனால் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்ட குரு மட்டும்தான் திருப்பலி நிறைவேற்ற முடியும். நோயில்பூசுதல் வழங்கவும் முடியும். எனவே இயேசு இந்த உலகில் கீழ்ப்படியும் ஒரேயொருவர் தன்னால் அதிகாரம் வழங்கப்பட்ட குருவுக்கு மட்டுமே எமது அன்றாடப் பணிவாழ்வில் ஆறுதலாக நேரமெடுத்துப் பலநிகழ்வுகளில் பங்குபெற்றுகின்றோம். அருட்பணிச்சபை மற்றும் பொதுச்சபைக் கூட்டங்கள், ஒன்றுகூடல்கள், கருத்தரங்குகள் முதல் ஆலயத் திருவிழாக்கள் வரை சரிவர நுணுக்கமாக தக்க ஆயத்தங்களோடு அனைத்தையும் பொறுமையோடு நிறைவேற்றுகின்றோம். ஆனால் கல்வாரி மலையின் அனுபவத்தை மீள நினைவுகூர்ந்து நிகழ்த்தப்படுகின்ற திருப்பலியைக் காத்திருந்து ஆசையோடும், ஆவலோடும் ஆயத்தம்செய்து ஆர்வத்தோடு நிறைவேற்றுகின்றோமா? தற்போது இருப்பதுபோல விரைவு வசதி வாய்ப்புக்கள் எதுவுமில்லாத முன்னைய காலங்களில் எமது முன்னோர் திருப்பலிக்கே நாளாந்தம் முன்னுரிமை கொடுத்தனர். இறைவன் பார்த்துக்கொள்வார் என்னும் ஆழமான நம்பிக்கையோடு திருப்பலியில் பங்கெடுத்தால் அனைத்து விடயங்களையும் தம் திருவுளத்திற்கேற்ப இறைவன்தாமே செய்துவைப்பார் என்பது எமது ஆழமான அனுபவம். மேலும் கல்வாரி மலை நிகழ்வின் அனுபவத்தைக் குறுகிய நேரத்திலேயே மிகவும் பயபக்தியுள்ள குருவின் வழியாகவும், அதே மனநிலையில் பங்குபற்றும் இறைமக்கள் வழியாகவும் இயேசு திருப்பலியில் நிகழ்த்துவார். இறை அச்சமில்லாத எந்த நம்பிக்கையும் ஆழம்பெறாது. பயபக்தியும் மனஒன்றிப்பும் உருவாக நேரமெடுத்து நற்கருணைக்கு முன்னால் செபிப்பது அவசியம். எமது அன்றாட செபநேரத்தை இந்த அவசர உலகம் களவெடுக்க விடக்கூடாது. ஏனென்றால் இது எமது நம்பிக்கையின் ஊற்றும், உச்சமும், உறைவிடமுமான மறைபொருள். தொடக்கத்தில் தண்ணீரின் மீது அசைவாடிக் கொண்டிருந்த தூய ஆவியார் இயேசுவாகிய வார்த்தையைத் தந்தையாகிய இறைவன் தன் வாயிலிருந்து உதிர்க்கும்வரை செயற்படவில்லை. அதாவது “ஒளி தோன்றுக!” (தொநூ 1:3) என்று உதிர்த்த வேளையில்தான் செயற்பட்டார். ஒளி தோன்றியது. அதேபோன்றே பலிப்பீடத்தில் குருவின் வசீகரவார்த்தைக்காகத் தூய ஆவியார் காத்திருந்து அப்பத்தை இயேசுவின் திருவுடலாகவும், இரசத்தைத் திரு இரத்தமாகவும் மாற்றுகின்றார். அன்னை மரியாவும், வானதூதர்களும், புனிதர்களும் பீடத்தைச் சூழ நின்று குருவின் வார்த்தைக்காகக் காத்திருக்கின்றார்கள். குருவின் கரங்களை முத்தமிடத் தயாராக அன்று பெத்லகேமில் இயேசுவைக் கரத்தேந்திய மரியா பீடத்தினருகே நிற்கின்றாள். இது உலகில் காணக்கூடிய பலிப்பீடங்களில் நிகழும் பலிகளில் மிகவும் மகத்துவமான மாபெரும் புதுமைமிக்க பலியாகும். வெறும் அப்பமல்ல இரசமல்ல, வசீகரத்தின் பின்பு அப்ப இரசக் குணங்களுக்குள் இயேசு வருகின்றார். எனவே இயேசுவின் திருவுடலும், இரத்தமும் எமது கத்தோலிக்க நம்பிக்கையின் மறைபொருளாக அமைகின்றது. இவ்வுடலை உண்டு இரத்தத்தைப் பருகுகின்ற ஒவ்வொரு கத்தோலிக்கரும் உலகின் தீமைகளை எதிர்த்துப் போராட தமது உடலாகிய ஆலயத்தில் இயேசுவைச் சுமந்து செல்கின்றனர். சமூகத் தீமைக் கெதிரான போராட்டத்தில் ஏற்படும் உணர்வுகளுடன் மீண்டும் பீடத்தில் இயேசுவோடு பலியாகின்றனர். தந்தைக்கு விருப்பமான உன்னத பலிப்பொருளாகிய இயேசுவோடு இணைத்து எம்மையும் ஏற்கும் இறைவன் தன் மகனையே விருந்தளித்து மீண்டும் தியாக வாழ்விற்கு அனுப்புகின்றார். இறைமக்கள் கொண்டுவரும் காணிக்கையாகிய அப்பமும், இரசமும் திருப்பலியில் பங்கெடுக்கும் ஒவ்வொருவரையுமே பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. “இது எனது உடல், இது எனது இரத்தம்” என்று கூறும் இயேசு எம் ஒவ்வொருவரையும் பார்த்து நீங்கள் எனது உடல், நீங்கள் எனது இரத்தம் என்று கூறித் தமது உடலாகவும் இரத்தமாகவும் எம்மை மாற்றித் தந்தையாகிய இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கின்றார். கல்வாரி மலையில் கண்காணும் வகையில் சிந்தப்பட்ட இரத்தம், பலிப்பீடங்களில் கண்காணாமல் அருளடையாள முறையில் சிந்தப்படுகின்ற இரத்தம் சமூகத்தின் தீமைகளை வன்முறைகளற்ற அமைதியான மௌன வழிகளில் எதிர்த்துப் போராடும் இயேசுவின் மறையுடலாகிய திருச்சபையின் அங்கத்தவர்களால் மாசில்லாக் குழந்தைகள் முதல் இன்றுவரை சிந்தப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. இச்சாட்சியம் உலக முடிவுவரை தொடரும். இதுவே 13ஆம் சிங்கராயர் (13ஆம் லியோ) திருத்தந்தை ஐப்பசி 13, 1884 இல் சாத்தானின் பயங்கரமான 100 வருட ஆட்சி பற்றிக் கண்ட காட்சி விபரிக்கின்றது. அரியணையில் வீற்றிருக்கும் கிறிஸ்து அரசர் முன்தோன்றித் திருச்சபையை அழிப்பேன் என்ற சவாலோடும், உன்னால் முடியாது என்ற இயேசுவின் பதிலோடும் 100 வருட ஆட்சிக்கான உத்தரவையும் கூடிய பலத்தையும் சாத்தான் பெறுவதையும் காண்கின்றார். பின் ஏற்படப் போகும் போர்களும், இனச்சுத்திகரிப்புகளும், நல்லொழுக்கப் பிறள்வுகளும், திருமண பிரமாணிக்கமின்மையும், விவாகரத்துகளும், கருத்தடைகளும் கருச்சிதைவுகளும், தனிமனிதப் புகழ்ச்சிகளும் ஆராதனைகளும், பதவிமோகமும் பணஆசையும், கட்டுப்பாடற்ற எப்படியும் வாழலாம் என்னும் சுதந்திர உணர்வும், நுகர்வுக் கலாசாரமும் போன்ற பல விடயங்களைக் காட்சியில் கண்டு திருப்பலியின் பின்பு மயங்கி விழுந்தார். அதே பரவச நிலையில் சாத்தானின் வழிபாடுகளும், தொழில்நுட்ப தொலைத் தொடர்பு சாதனங்கள், அறிவியல் புதிய கண்டுபிடிப்புக்கள் ஆகியவற்றில் சிக்கிச் சிறைப்பட்ட மனிதர்கள் திருச்சபைக்கெதிரான கொள்கைகளால் கவரப்பட்டு சிற்றின்பக் கேளிக்கைகளில் ஈடுபட்டு வாழ்வையே அழித்துக் கொள்ளும் அகங்கார நிலையையும் சாத்தானின் ஆட்சியில் வரப்போவதைக் கண்டார். எனவேதான் பத்திமாபதியில் மரியன்னையின் காட்சிக்கு முன் நற்கருணையை ஏந்திவந்து பிள்ளைகளுடன் சேர்ந்து நெற்றி நிலத்தில்பட ஆராதித்து அவருடைய மற்றும் மரியாயின் இதயத்திற்கெதிராகச் செய்யப்படும் துரோகங்கள் அவமானங்களுக்குப் பரிகாரம் செய்யும்படி கேட்டு பிள்ளைகளைப் பரிகாரமுயற்சிகளுக்குத் திடப்படுத்தும்படியாக லூசியாவுக்கு நற்கருணையையும், யசிந்தா பிரான்சிஸ்கோவுக்கு இரத்தத்தையும் கொடுத்தார். முதலாம் உலகப் போரின்போது இடம்பெற்ற மரியன்னையின் காட்சியுடன் தொடங்கி இந்த 100 வருட சாத்தானின் ஆட்சி தலைவிரித்தாடுகின்றது. எனவே வலியில் விளைந்த அன்பாகிய நற்கருணையைப் பெறுகின்ற நாமெல்லோரும் இந்த சாத்தானின் ஆட்சிக்கு சவாலாக இரத்தம் சிந்தும் அளவிற்கு வலிகளைத் தாங்கித் துன்புறும் திருச்சபையாகப் பதிலன்பு காட்டுவோம். ●



# இளையோர் மன்னா



# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம்

## – அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி –

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர) பயிற்சி பரீட்சை - 2019

1. பண்பாடு என்பதன் வரையறையாகக் கொள்ளப்படுவது.
   1. மனிதன் தன் உடல் உள இயல்புகளை திறமைகளை பயன்படுத்தி வளப்படுத்தி வளர்ச்சியுறச் செய்யும் முயற்சி
   2. நகரத்தோடு இணைந்து காணப்படுவது
   3. பண் என்ற வினையடியைக் கொண்டு காணப்படுவது
   4. ஒரு சமூகத்தின் அறிவு நம்பிக்கை கலை ஒழுக்கம் ஆகியன திருந்திய நடை
   5. அது தோன்றிய மண்ணுக்கும் மக்களுக்கும் உரியது

2. ‘‘நாகரிகங்களின் தொட்டில் என வர்ணிக்கப்பட்டது
   அரசனே நாட்டின் தலைவனாவான்
   அமுராபியினர் சிறந்த நிர்வாகி போர் வீரர்களாவர்’’
   இச் சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட நாகரிகம்.
   1. எகிப்திய 2. மொசப்பத்தேமியா 3. யூத
   4. அசீரிய 5. கிரேக்க நாகரிகம்

3. எமோரியர் எனும் செமித்திய இனத்தைச் சேர்ந்தவர் பல தெய்வங்களை வழிபட்டவர், இக் கூற்றுக்களுடன் தொடர்புபட்டவர்.
   1. ஆபிரகாம் 2. ஈசாக் 3.யோசேப்பு
   4. மோசே 5. தாவீது

4. மரணத்தின் பின் வாழ்வு உண்டு என்ற நம்பிக்கை கொண்ட நாகரீகம்.
   1. நைல்நதி 2. மொசப்பதேமிய 3. பபிலோனிய
   4. அசீரிய 5. கிரேக்க நாகரீகம்

5. மக்கபேயருக்கும், கிரேக்கருக்கும் இடையில் யுத்தம் நடைபெற்ற பகுதி.
   1. பெலிஸ்திய சமவெளி 2. பெத்சாய்தா
   3. ஆக்கா சமவெளி 4. எஸ்திரலோன்
   5. எபிரோன்

6. சுக்கோத் என்பதன் பொருள்.
   1. குடிசை கூடாரம் 2. புதுப்பித்தல் 3. சாபம்
   4. ஓய்வு நாள் 5. விடுதலை

7. இயேசு நீங்கள் போய் அந்த நரியிடம் கூறுங்கள் எனக் கூறியது…… குறித்து ஆகும்.
   1. பிலிப்பு 2. அர்க்கெலா 3. ஏரோது அந்திப்பா
   4. பெரிய ஏரோது 5. 1வது ஏரோது அக்கிரிப்பா

8. பரிசேயர் என்பதன் பொருள்.
   1. பிரிந்து நிற்பவர் 2. இணைந்து நிற்பவர்
   3. சேர்ந்து நிற்பவர் 4. குழுவாக நிற்பவர்
   5. சுரியாக நிற்பவர்

9. பாலஸ்தீனாவில் உரோமையரின் ஆட்சிக் காலமாவது.
   1. கி.மு 333 - கி.மு 63 2. கி.மு 63 – கி.மு 70
   3. கி.மு 333 – கி.மு 63 4. கி.மு 63 - கி.மு 70
   5. கி.மு 333 - கி.பி 70

10. யூத சமூகத்தில் மணத்துறவு கொண்டோர் …… எனப்பட்டனர்.
    1. சதுசேயர் 2. பரிசேயர் 3. எசேனியர்
    4. மறைநூலறிஞர் 5. சட்டவல்லுனர்

11. ’’விண்ணரசு’’ என்பது….. குறிக்கின்றது.
    1. குறிப்பிட்ட நிலப்பரப்பைக்
    2. இறைவனின் நிறைந்த ஆட்சியைக்
    3. விடுதலையைக்
    4. இறைவனின் மீட்பைக்
    5. இறை விடுதலையைக்

12. மத்தேயு இயேசு இறையரசைப் பற்றிப் போதித்தவற்றை தொகுத்து தமது நற்செய்தியில் 5 நீண்ட அறிவுரைகளாக அளித்துள்ளார், அவை பழைய ஏற்பாட்டில்........... ஒப்பிடப்படுகின்றது.
    A. தோராவிலுள்ள 5 நூல்களுக்கு B. எரியும் முட்செடிக்கு
    C. மோயிசனின் அறிவுரைக்கு D. திருப்பாடல்களுக்கு
    E. பத்துக் கட்டளைக்கு
    1. A 2. B 3. C 4. D 5. E

13. மலைப் பொழிவு எனப்படுவது.
    A. எட்டுப் பேறுகளே மலைப் பொழிவு எனப்படும்
    B. அயலவருடனான உறவு பற்றிய கருத்துக்களே மலைப் பொழிவு எனப்படும்
    C. சீடர்கள் கடைப்பிடித்து வாழ வேண்டிய உயர்ந்த அடிப்படை ஒழுக்க நெறி பற்றிய கன்னிப் பொழிவே மலைப் பொழிவு எனப்படும்
    D. நாம் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளே மலைப் பொழிவு எனப்படும்
    1. A 2. B,C 3. D 4. C 5. A,B

14. ‘‘கொயினோனியா’’ என்ற கிரேக்கச் சொல்லின் பொருள்.
    1. நட்புறவு 2. மீட்பு 3. விடுதலை 4. ஒப்புரவு 5. அன்பு

15. எட்டுப் பேறுகளில் முதல் மூன்று பேறுகளும் குறித்து நிற்கும் கருத்து.
    1. இறைவனோடு நாம் கொண்டிருக்க வேண்டியமனநிலை
    2. சக மனிதரோடு நாம் கொண்டிருக்க வேண்டியமனநிலை
    3. இறை – மனிதரோடு நாம் கொண்டிருக்க வேண்டிய மனநிலை
    4. சமூகத்தோடு நாம் கொண்டிருக்க வேண்டிய மனநிலை
    5. திருச்சபையோடு நாம் கொண்டிருக்க வேண்டிய மனநிலை

16. புனித பவுல் ஒழுக்க விழுமியக் கோட்பாட்டிலே திருச்சபையின் உயிர்நாடி எதுவெனக் கூறுகின்றார்.
    1. இயேசு கிறிஸ்து 2. குடும்பம் 3. ஆதிப்பெற்றோர்
    4. ஆதிக் கிறிஸ்தவர்கள் 5. ஆலயம்

17. அன்புக்கு பவுல் பயன்படுத்தும் கிரேக்கச் சொல்.
    1. நயூமா 2. வுல்கத்தா 3. சேயூமா
    4. அகப்பே 5. கரியூஸ்

18. கிரேக்க மொழி செல்வாக்குப் பெற்ற மொழியாகத் திகழ்ந்தது.
    1. மகா அலெக்சாண்டரின் காலத்திலும் - அதன் பின்னரும்
    2. பொம்பேயி அரசன் காலத்திலும் - அதன் பின்னரும்
    3. ரோமுலஸ் அரசன் காலத்திலும் - அதன் பின்னரும்
    4. பேரரசர் வலேரியன் காலத்திலும் - அதன் பின்னரும்
    5. நீரோவின் காலத்தில்

19. ‘‘மனம் மாறுங்கள்’’.
    ‘‘உங்கள் பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுவதற்காக திருமுழுக்குப் பெறுங்கள்’’ ‘‘நெறிகெட்ட இத்தலைமுறையில் இருந்துவிலகி வாழுங்கள்’’
    மேற்கூறப்பட்ட கூற்றுக்களோடு தொடர்புடையவர்
    1. புனிதபேதுரு 2. ஸ்தேவான் 3. புனிதபவுல்
    4. திருமுழுக்குயோவான் 4. பிலிப்பு

20. A. நிலபுலன்களை விற்று அனைவருக்கும் பகிர்ந்தளித்தனர்
    B. அவர்கள் கிரேக்க மொழி பேசும் யூதர்களாய் இருந்தனர்
    C. அவர்களின் அன்பு நிறைந்த ஒற்றுமையான வாழ்வு எல்லோரையும் கவர்ந்தது
    D. அறப்பணிக்கென நியமிக்கப் பட்டாலும் நற்செய்திப்பணி புரிந்தனர்
    E. நட்புடன் உறவாடி பொறுப்புணர்வுடன் நடந்தனர்
    இவற்றுள் முதல் கிறிஸ்தவர்களின் வாழ்வியற் பன்புகளாவன
    1. A,B,C 2. B,C,D 3. A,C,D 4.A,C,E 5.C,D,E

21. கிறிஸ்தவம் தோன்றிய பின்னணி.
    1. எருசலேமில் யூதர்கள் மத்தியில்
    2. உரோமையில் யூதர்கள் மத்தியில்
    3. எருசலேமில் கிரேக்கர் மத்தியில்
    4. உரோமையில் கிரேக்கர் மத்தியில்
    5. தமஸ்குவில் புறவினத்தவர் மத்தியில்

22. மத்தியதரைக்கடலைச் சூழவுள்ள நாடுகளில் திருச்சபை பரப்பப்பட்டது..... ஆகும்.
    1. பேதுருவின் மரணத்தினால்
    2. கிறிஸ்துவின் மரணத்தினால்
    3. யோவானின் மரணத்தினால்
    4. ஸ்தேவானின் மரணத்தினால்
    5. பவுலின் மரணத்தினால்

23. துறவற வாழ்வின் மூன்று வார்த்தைப்பாடுகள்.
    1. கீழ்ப்படிவு, தாழ்ச்சி, ஏழ்மை
    2. ஏழ்மை, கற்பு, தாழ்ச்சி
    3. கீழ்ப்படிவு, கற்பு, ஏழ்மை
    4. கீழ்ப்படிவு, எளிமை, ஏழ்மை
    5. தாழ்ச்சி, கற்பு, கீழ்ப்படிவு

24. பின்வருவனவற்றில் மத்திய காலத்தில் திருச்சபை சீர்குலைந்தமைக்கான காரணங்கள்.
    A- அளவுக்கதிகமான காரணங்கள்
    B- திருச்சபைத் தலைவர்கள் லௌகீக வாழ்க்கை முறைக்கு மாறியமை
    C- குருக்களின் போதிய கல்வியறிவின்மை
    D- தகுதியில்லாத நபர்கள் திருச்சபையின் முக்கிய பதவிகளைத் தக்கவைத்துக் கொண்டமை
    E- குருக்களுக்கு மக்களைச் சந்திப்பதில் காணப்பட்ட சிக்கல்
    1. Aயும் Bயும் 2. Bயும் Dயும் 3. Aயும் Dயும்
    4. Bயும் Eயும் 5. Cயும் Eயும்

25. ஸ்தேவானின் கொலையானது
    1. உரோமையக் கலாபனையின் ஆரம்பமாய் இருந்தது
    2. திருச்சபை உயிர்பெறக் காரணமாய் இருந்தது
    3. யூத கலாபனையின் ஆரம்பமாய் இருந்தது
    4. ஜேருசலேமிற்குள் நற்செய்தி பரவக் காரணமாய் இருந்தது
    5. கிறிஸ்தவர்களுக்கு விடுதலை கிடைத்தது

26. முதல் மூன்று நூற்றாண்டுகளையும் திருச்சபையின்………… என்று அழைக்கின்றோம்.
    1. பொற்காலம் 2. துறவறக்காலம்
    3. வேதசாட்சிகளின் காலம் 4. இருண்டகாலம்
    5. வீரவரலாற்றுக் காலம்

27. கிறிஸ்தவர்கள் இயேசுவின் இறை கொலைப் பழியை……
    1. உரோமையர் மேல் சுமத்தினர்
    2. யூதர்கள் மேல் சாட்டினர்
    3. யூதர்கள் மேல் சுமத்தினர்
    4. கிறிஸ்தவர்கள் மேல் சுமத்தினர்

28. இந்த அடையாளத்தைக் கொண்டு நீ வெற்றி பெறுவாய் இக் கூற்றோடு தொடர்புடைய சம்பவம்.
    1. பேரரசர் கொன்ஸ்தாந்தின் உரோமைக்காகப் போரிட முற்பட்டு முன்னேறிச் சென்ற சந்தர்ப்பம்
    2. பவுல் 1ம் மறை போதகத்தை மேற்கொண்ட சந்தர்ப்பம்
    3. பேதுரு கொர்னேலியுவின் வீட்டிற்குச் செல்ல முற்பட்ட சந்தர்ப்பம்
    4. பர்னபா 2ஆம் பயணத்தை மேற்கொண்ட சந்தர்ப்பம்

29. இயுக்திக்கேய பேதகத்திற்கு எதிராகக் கூட்டப்பட்ட திருச்சபையின் 4வது பொதுச்சங்கம்.
    1. எபேசு பொதுச்சங்கம் 2. கல்செடோன் பொதுச்சங்கம்
    3. நிசேயா பொதுச்சங்கம் 4. ஜேருசலேம் பொதுச்சங்கம்
    5. திரித்தெந்தீன் பொதுச்சங்கம்

30. ‘‘கத்தோலிக்க திருச்சபை’’ என்ற பதத்தை முதன் முதலில் பயன்படுத்தியவரும்’’ ‘‘கடவுளை உடுத்தியவர் கடவுளைச் சுமப்பவர் என அழைக்கப்பட்டவரும்.
    1. அந்தியோக்கு இஞ்ஞாசியார் 2. ஆயர் சிமியோன்
    3. சிலுவை அருளப்பர் 4. யோன் மாற்கு
    5. புனித பெலவேந்திரர்

31. முதல் பாடசாலைகள் ஆரம்பமாகிய இடம்.
    1. ஆலயங்களில் 2. கிராமங்களில் 3. மர நிழல்களில்
    4. துறவற மடங்களில் 5. அனாதை இல்லங்களில்

32. போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்பு பெண்களுக்கு ………….. வழங்கப்பட்டது.
    1. ஆழகியற் கல்வி 2. அனுபவக்கல்வி
    3. எழுத்தறிவுக்கல்வி 4. இசை நடனக்கல்வி 5.ஆடற்கல்வி

33. தமிழ் கிறிஸ்தவ இலக்கியத்தின் தந்தை எனப்போற்றப்பட்டவர்.
    1. யாக்கோமே கொன்சால்வேஸ் 2. ஹென்றி ஹென்றிக்கஸ்
    3. கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் 4. மனுவல் மிரான்டா
    5. சைமன் ஸ்டொக்

34. போர்த்துக்கேயர் முதன் முதல் இலங்கை அரசனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதைத் தொடர்ந்து நடை பெற்ற செயற்பாடுகளுள் பொருத்தமற்ற கூற்று ஒன்று.
    A. அன்று தான் இலங்கைத் திருச்சபைக்கு அத்திவாரம் இடப்பட்டது
    B. லவுறேஞ்சியரின் பெயரில் சிற்றாலயம் ஒன்று கட்டப்பட்டது
    C. முதல் திருப்பலி இலத்தீன் மொழியில் ஒப்புக் கொடுக்கப்பட்டது
    D. புத்த பிக்குகளுக்கு நாட்டில் பெரிய மரியாதை காணப்பட்டது
    E. உரோமா புரியில் இச்செய்தி வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டது
    1. A 2. B 3. C 4. D 5. E

35. திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தை தழுவியதோடு நற்செய்திப் போதகம் அரசு முழுவதும் நடைபெற்றது கல்லூரிகள், மடங்கள் ஆலயங்களைக் கட்டுவதற்கு நிலபுலன்களையும் நிதிகளையும் கொடுத்துதவினர்.
    மேற்கூறப்பட்ட கூற்றுக்களுடன் தொடர்புடைய அரசன்.
    1. புவனேகபாகு 2. தர்மபராக்கிரமபாகு
    3. விஜயபாகு 4. தர்மபாலா
    5. மாயாதுன்ன

36. அருட்தந்தை யுவான் விலா கொன்தே பிரான்சிஸ்கு மொன்தே பிரன்தோனே கோன்சாலே, இவர்களோடு தொடர்புடைய கூற்று.
    1. முதலாவது மறைப்பரப்புக் குழுவாகிய பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்தவர்கள்.
    2. முதலாவது மறைபரப்புக் குழுவாகிய இயேசு சபை சார்ந்தவர்கள்.
    3. முதலாவது மறைப்பரப்புக் குழுவாகிய டொமினிக்கன் சபையைச் சார்ந்தவர்கள்.
    4. முதலாவது மறைப்பரப்புக் குழுவாகிய அகுஸ்தீன் சபையைச் சார்ந்தவர்கள்.
    5. முதலாவது மறைப்பரப்புக் குழுவாகிய அமலமரித்தியாகிகள் சபையைச் சார்ந்தவர்கள்.

➡ 13

# சில உணவுகளை இரவில் சாப்பிடுவது கூடாது



பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் இவ்வுலகில் உணவு விடயங்களில் பலரும் சரியான அக்கறை கொள்வதில்லை. எந்த உணவுகளை எடுத்துக் கொண்டாலும் அதற்கான நேரத்தில் அதைச் சாப்பிட்டால் அது உடலுக்கு நல்லது செய்யும். அதையே தவறான வேளையில் எந்தவொரு உணவை சாப்பிட்டாலும் அது உடலுக்கு கேடு விளைவித்து விடும். மக்கள் அதிகம் உண்ணும் சில உணவுகளை எந்த நேரத்தில் சாப்பிடலாம் மற்றும் சாப்பிடக்கூடாது எனத் தெரிந்து கொள்வோமா?

### வாழைப்பழம்

வாழைப்பழங்களை மதிய உணவு நேரத்தில் சாப்பிட வேண்டும். அப்படிச் சாப்பிட்டால் அது உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். வாழைப்பழத்தை இரவு நேரத்தில் சாப்பிட்டால் உடலில் சளி சேர்வதுடன், செரிமானப் பிரச்சனையும் உண்டாகும்.

### அப்பிள்

அப்பிள் பழங்களைக் காலை சிற்றுண்டி வேளையில் சாப்பிட்டால் இரத்தத்தில் இருக்கும் சர்க்கரை அளவு மற்றும் கொழுப்பின் அளவையும் குறைக்க உதவும். அப்பிளில் பெக்டின் என்னும் பசை சத்து உள்ளது. இதனால் இதை இரவு டின்னர் நேரத்தில் சாப்பிட்டால் வயிற்று உப்புசம் தொல்லை ஏற்படும்.

### உருளைக்கிழங்கு

உருளைக்கிளங்கில் கனிமச்சத்து அதிகம் உள்ளதால் இதை காலை சிற்றுண்டியுடன் சாப்பிட்டால் கொழுப்பின் அளவு குறையும். இதையே இரவு சாப்பிட்டால் அதில் இருக்கும் கலோரிகள் உடல் எடையை அதிகரிக்கச்செய்து விடும்.

### பால்

மிதமான சூட்டில் பாலை இரவு நேரத்தில் அருந்தினால் அது உடல் மென்மையை அதிகரிக்கச் செய்து இரவில் நல்ல தூக்கத்தை உடலுக்குத் தரும். காலையில் உடலுக்கு அசதி தரும் எந்தவொரு வேலையும் செய்யாமல் பால் அருந்தினால் அது வயிற்று செரிமான பிரச்சனையை ஏற்படுத்தி விடும்.

### பாதாம், பிஸ்தா

முந்திரி, பாதாம், பிஸ்தா போன்ற பருப்புக்களை மதிய உணவு வேளையில் சாப்பிட்டால் உடலில் இரத்தக் கொதிப்பை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளும். இதையே இரவு நேர டின்னருக்குப் பின்னர் சாப்பிட்டால் உடல் எடை அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

### ஒரேஞ்

மாலை வேளையில் இதை சாப்பிட்டால் செரிமானத் திறனும், நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகரிக்கும். ஒரேஞ் பழங்களை காலை சிற்றுண்டியுடன் சாப்பிடக்கூடாது. ஏனென்றால் அது வயிறு எரிச்சல், இரப்பை அலர்ச்சி போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

### அரிசி சாதம்

அரிசியால் வடித்த சாதத்தை மதிய உணவு வேளையில் சாப்பிட்டால் அதில் இருக்கும் கார்போஹைட்டேட்ஸ் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்யும். இரவு டின்னரில் அரிசி சாப்பாட்டை சாப்பிட்டால் எடை அதிக அளவில் கூடும்.

### சொக்லேட்

நல்ல தரம் வாய்ந்த சொக்லேட்டுக்களை காலை சிற்றுண்டி சமயத்தில் சாப்பிட்டால் அதில் இருக்கும் வேதிபொருளானது இதய நோய்கள் வராமல் தடுக்கும். மாலை சிற்றுண்டி வேளையில் சொக்லேட்களைச் சாப்பிட்டால் உடல் கொழுப்பை அதிகரிக்கும்.●

# சமையல் குறிப்பு

## கேரட் அல்வா

### தேவையானவை:

கேரட் - ஒரு கிலோ
பால் - அரை லீட்டர்
நெய் - 50 கிராம்
முந்திரி - 20 முதல் 30
சர்க்கரை - 200 கிராம்
ஏலக்காய் - 3
கிராம்பு - 3



### செய்முறை :

பாலை நீர் ஊற்றாமல் காய்ச்சி வைக்கவும். மற்ற தேவையானவற்றை எடுத்துக் கொள்ளவும். கேரட்டை மேல் தோல் சீவி துருவிக் கொள்ளவும். அடுப்பில் அடிகனமான பாத்திரத்தை வைத்து துருவிய கேரட்டை மட்டும் சேர்த்து நீர்பதம் வற்ற வதக்கவும். பின் அதில் பால் மற்றும் சீனி சேர்த்து சுருளும் வரை கிளறவும். வேறொரு பாத்திரத்தில் நெய்யை சூடாக்கி முந்திரி, ஏலக்காய், கிராம்பு ஆகியவற்றை வறுத்து வைத்துக் கொள்ளவும். பால் வற்றியதும் அதில் வறுத்த முந்திரியை சேர்த்து நெய் பிரியும் வரை கிளறிக் கொண்டே இருக்கவும். நெய் பிரிந்து வந்ததும் சுவையான கேரட் அல்வா தயார். ●

# மருத்துவக் குணங்கள் நிறைந்த பேரீச்சம்பழம்



- மாலைக்கண் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், பேரீச்சம் பழத்தை, தேனுடன் கலந்து ஊற வைத்து சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான எல்லா சத்துக்களும் கிடைக்கும். இதனால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.
- பேரீச்சம் பழம் செரிமான மண்டலத்தின் ஆரோக்கியத்திற்கு நல்லது. ஒருவேளை உங்களுக்கு சீரற்ற குடலியக்கம், மலச்சிக்கல் அல்லது வேறு ஏதேனும் செரிமான பிரச்சனைகள் இருப்பின், பேரீச்சம் பழத்தை தினமும் உட்கொண்டு வர, அதில் உள்ள நார்ச்சத்து இப்பிரச்சனைகளுக்கு தீர்வளித்து, குடல் புற்றுநோய் வரும் அபாயத்தைக் குறைக்கும்.
- பேரீச்சம் பழத்துடன், பாதாம் பருப்பு சேர்த்து, பாலில் கலந்து கொதிக்க வைத்து சாப்பிட்டால் நரம்புத் தளர்ச்சி நீங்கி, ஞாபக சக்தி கூடும். கைகால் தளர்ச்சி குணமாகும்.
- பேரீச்சம் பழத்தை கர்ப்ப காலத்தில் உட்கொண்டு வந்தால், பிரசவம் முடிந்த பின் உடல் எடையை குறைக்க உதவியாக இருக்கும்.
- பேரீச்சம் பழத்தில் உள்ள பொட்டாசியம், இதய செயல்பாட்டை மென்மையாக்கி, இரத்த அழுத்தத்தை சீராக வைத்துக் கொள்ளும். எனவே பேரீச்சம் பழம் சாப்பிட்டு வந்தால் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளலாம்.
- தினமும் பேரீச்சம் பழத்தை உட்கொண்டு வந்தால் மூளையின் செயற்பாடு மேம்படும். அதாவது ஞாபக சக்தி, ஒருமுகப்படுத்தும் தன்மை, கூர்மையான புத்தி, எதையும் எளிதில் கற்றுக் கொள்ளும் திறன் போன்றவை அதிகரிக்கும்.
- பேரீச்சம் பழத்தில் உள்ள அதிகப்படியான இரும்புச்சத்து உடலில் இரத்தணுக்களின் அளவை அதிகரித்து, இரத்த சோகை வரும் அபாயத்தைக் குறைக்கும். எனவே உங்கள் உடலில் இரத்தத்தின் அளவு சீராக இருக்க தினமும் 3 பேரீச்சம் பழத்தை உட்கொண்டு வாருங்கள்.
- சளி, இருமலுக்கு பேரீச்சம் பழத்தின் கொட்டைகளை நீக்கி பாலில் போட்டு காய்ச்சி பருகி வந்தால் சளி, இருமல் குணமாகும். ●

# கொஞ்சம் சிரிங்க

**கணவன்:** "அப்படி என்ன தலைபோற அவசரம்னு ஆட்டோ பிடிச்சு என் ஆபீசுக்கே வந்திருக்கின்றாய்"
**மனைவி:** ம்... நம்ம வீட்டு வேலைக்காரியைக் காணோம். நீங்களாவது ஆபீஸ்ல இருக்கீங்களான்னு பாத்திட்டுப் போலாம்னு வந்தேன்!!

***************

**மனைவி:** உங்கள பார்த்துக்கிட்டே இருக்கணும் போல இருக்குங்க..
**கணவன்:** அப்பவே யோசியர் சொன்னாரு கல்யாணத்துக்கு அப்புறம் சனி பார்வை உங்க மேலேயே இருக்குமுன்னு.

***************

**நிசாந்:** என்ன மாணிக்கம் எங்கட கறிச்சட்டி மாதிரி தலையில் வீங்கியிருக்கு.
**மாணிக்கம்:** இனிமேல் அடிக்க மாட்டேன்னு கையில் இருந்த உலக்கையால் அடித்து சத்தியம் பண்ணினா மனைவி.

***************

**மாணவன்:** சேர், என்னால வீட்ல இருந்து ஒழுங்காப் படிக்க முடியவில்லை. அப்பாவும், அம்மாவும் ஒரே சண்டை.
**ஆசிரியர்:** யார்டா உன் அப்பன்?
**மாணவன்:** அதைக் கேட்டுத்தான் சேர் தினமும் சண்ட நடக்குது!



**மோகன்:** என்ன தலையை விரிச்சுப்போட்டுக்கிட்டு ஆபீஸ் போறா?
**மாலதி :** லேற்றாப் போனா எங்க மெனேஜர் பின்னிடுவாரு.

***************

**தந்தை:** கம்பசுக்குப் போகும்போது பசங்களின் தொல்லையால் மகளிட்ட மிளகாய்ப்பொடி கொண்டுபோகச் சொன்னது தப்பாப் போச்சு...!
**நண்பர்:** ஏன்?
**தந்தை:** இப்ப பசங்க எல்லாம் இட்லியோட அவ பின்னால அலையிறாங்களாம்.

***************

**கணவன்:** என் மகனை டாக்டராக்கியது தப்பாய்ப்போய்விட்டது?
**மனைவி:** ஏன் என்னாச்சு?
**கணவன்:** அறுவைச் சிகிச்சை பண்ண யாரும் வராததால் போரடிக்குது என்று எனக்கு ஏதாவது அறுவைச் சிகிச்சை பண்ணட்டுமா எனக்கேட்டு உயிரை வாங்கிறான்.

# அழகுக் குறிப்புக்கள்



- வெள்ளை முள்ளங்கி சாறுடன் 2 ஸ்பூன் எலுமிச்சைச் சாறு, 2 ஸ்பூன் தக்காளிச் சாறு சேர்த்து முகத்தில் தடவி 20 நிமிடம் கழித்து மிதமான சுடுநீரில் கழுவ வேண்டும். இதைத் தொடர்ந்து செய்துவர வெப்பத்தால் உண்டாகும் தவிட்டு நிறப்புள்ளி மறையும்.
- உலர்ந்த சருமம் உள்ளவர்கள் கிளிசரினுடன் ரோஸ் வாட்டர் மற்றும் எலுமிச்சைச் சாறு கலந்து முகத்தில் தடவலாம்.
- முகம் மிருதுவாகவும், ரோஸ் நிறத்துடனும் இருக்க ரோஜாப்பூ இதழ்களை அரைத்து அதனோடு பால், பச்சை பயறு மாவு, மற்றும் ரோஸ் வாட்டர் கலந்து முகம் மற்றும் கழுத்தில் தடவி வர சருமம் பளபளக்கும்.
- கரும்புள்ளி உள்ள இடத்தில், பச்சைப் பயருடன் தயிர் சேர்த்து தடவ வேண்டும். அது காய்ந்ததும் கைகளால் மேலும் கீழும் நன்கு தேய்த்து பின் முகத்தைக் கழுவ வேண்டும். இவ்வாறு செய்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறையும்.
- கடலை மாவு ஆறு டீஸ்பூன், பாலாடை இரண்டு டீஸ்பூன், எலுமிச்சை பழச்சாறு 10 சொட்டு, கிளிசரின் ஒரு டீஸ்பூன் கலந்து தினமும் ஒருமுறை முகம், கை, கழுத்து பகுதிகளில் தடவினால் வெயிலினால் ஏற்படும் கருமையைப் போக்கலாம். பப்பாளி கூழுடன் தேன் கலந்து முகத்தில் தடவி வந்தாலும் நல்லது.
- வெள்ளரிச்சாறு, சந்தனப்பொடி, கடலைமாவு மூன்றையும் சம அளவு கலந்து முகம், கை கால்களுக்கு தினமும் போட்டு வந்தால் முகம் பிரகாசமாக இருக்கும். ●

# மன்னா விளம்பரப் பலகை

உன் வேதனை பலரை சிரிக்க வைக்கலாம்...
ஆனால் உன் சிரிப்பு ஒருவரைக்கூட வேதனைப்படுத்தக் கூடாது.

வலுவான செயல்கள் தெளிவான முடிவை நோக்கியதாக இருக்க வேண்டும்.

......................

உனது பிரச்சனைகளை உன்னால்தான் சரி செய்யமுடியும். ஏனென்றால், அதை உருவாக்கியவனே நீதான்.

......................

இந்த உலகில் நாம் நம் கண்முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நாம் நேசிக்க இயலவில்லையென்றால் கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பைச் செலுத்த முடியும்.

பொய் சொல்லி தப்பிக்க நினைக்காதே. உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள்.... ஏனென்றால் பொய் வாழவிடாது உண்மை சாகவிடாது!

......................

"வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஒரு வழி, அடுத்தவர்களின் வெற்றியை உங்களுடைய வெற்றியைப்போலக் கொண்டாட கற்றுக்கொள்ளுங்கள்"

......................

உங்களை பலவீனர்கள் என்று சொல்லாதீர்கள். நீங்கள் ஆன்மாவால் செய்ய முடியாத காரியம் எதுவும் இல்லை.

அடிமையாக இருப்பவன் தனக்குக் கீழே ஓர் அடிமை இருக்க வேண்டுமென்று கருதினால், உரிமைகளைப் பற்றிப் பேச அவனுக்கு உரிமையே கிடையாது.

யாருடைய நம்பிக்கையையும் கலைக்க முயலாதீர்கள். முடியுமானால் அந்த மனிதனுக்கு அவன் கொண்ட நம்பிக்கைக்கும் மேலாக இன்னொன்றைக் கொடுங்கள்.

# கலை இலக்கியச் சாளரம்

## அப்பாதான் என் முதல் அம்மா



அப்பா! கடவுளுக்கும் மேலான
அபூர்வ சக்தியின் வெளிப்பாடு
சறுக்கப்பட்ட பெரும் வெளியில்
சிதைக்கப்பட்ட போதும்
சீர்படுத்திய சிகரத்தின் மகுடம்

நான் கருவுற்றநாள் தொடங்கி
கையில் தூக்கும் நாள் வரையில்
கருவறையின் மேலுருவில்
அன்புக் காவல் கொண்ட
காவியச் சுவட்டின் காதலன்!

கொட்டும் மழையிலும்
வீசும் பனியிலும்
வாட்டும் ஒளியிலும்
தேகம் கறுக்க நோயும் பிடிக்க
தோலும் சுருங்கி குரலுமடைத்து

சுமையான போதும்
எனை மார்பில் அணைக்க
கரத்தைப் பிடித்து நடையும் பழக்க
நிலாவைக் காட்டி சோறும் ஊட்ட
தோளில் தூக்கி பாடல் பாட

விழியில் எனை நிறுத்தி
வலிமை உடன் மறந்து
என்னுடலை வலுவாக்க
அவருடலை மாய்த்தெடுக்க
பாலைவன வெளியிலும்
பால் கொடுத்த என் முதல் அம்மா!

விதம் விதமா ஆடைவாங்கி
திரவியங்கள் உடனெடுத்து
வண்ணக்கூடை ஒன்றிலே
ஒட்டுத்துணி நிறைவாக்கி

பஞ்சு மெத்தை ஒன்றெடுத்து
பக்குவமாய் மடித்து வைத்து
பட்டினியாய் கிழிந்தவுடை
உடுத்திக்கொண்டு

மூலையிலே கிடப்பாரே!
என் அப்பா கடவுளுக்கு மேல்தான்
கொஞ்சம் நான் வளர்ந்துவிட
ஒதுக்கி என்னை வைத்ததில்லை

தோல்வியைப் பகிர்ந்து கொள்ள
கவலைகள் கூறிவிட
கண்ணீரைத் துடைத்துவிட்டு
ஆறுதல் கூறி பலப்படுத்தும்
என் முதல் நண்பன் அப்பாதான்!

அப்பா! காலத்தில் படர்ந்துவிடும்
கானல் நிழலில்லை
காவியத்தில் எழுதிவிடும்
கருக் கொண்ட நிஜம்....! ●

*- டிஷாமினி மரியதாஸ்ஜோண், தாஸ்கோட்டம் வவுனியா -*

## கருகிப் போன கனவுகள்...!

கண்சிமிட்டி கைகுலுக்கி வாழ்ந்து
கன்னிமை குன்றாமல் கவனமாய் இருந்த
கன்னிப் பெண்ணின் கனவுகள் எல்லாம்
காமுகரின் கைகளால் கண் நொடியில் மடிந்தது...!

பாடுபட்டு படித்து - பல
பட்டங்கள் பெற்ற - நல்
பண்பான உள்ளங்கள்
பட்டப்பகலிலே பரிதாபப் பிணமாய்...!

கோடு போட்டு வாழ்ந்த - பல
கோடீஸ்வரர்கள் எல்லாம்
கண்ணிமைக்கும் நொடியிலே
காணாமலாக்கப்பட்டார்...!

கலைத்துறை படித்து
கல்விமானாவேன் - என்று
கண்ணியமாய் வாழ்ந்தவள்
கண்நொடிப் பொழுதில் வீணாகிப்போனாள்...!

காலாகாலமாய் நடக்கும் - இந்த
கறைபட்ட அநீதிகளால்
கண்ணியமாய் வாழ்ந்தவர்களின் வாழ்வு
கருகிப்போன கனவுகளாய்...! ●

*அ. ஜஸ்மின் ஷரோண் ஆவணம் நானாட்டான்.*





## அன்னையே எம் செபமாலைத் தாயே

மருதமடு ஆலயத்தில்
மங்காப் புகழோடு
மகிமையுடன் வீற்றிருக்கும்
மாமரியே எம் தாயே



மயிற்குழாம் தம் சிறகால்
மலர்ச்சியுடன் நடனமிட
மந்திக் கூட்டம் அக்களித்து
ஆனந்தமாய் ஆர்ப்பரிக்க

வண்டினங்கள் குழலூத
தேனிலையான் இசைமீட்க
தேன் குரலில் குயிலினங்கள்
தேவதாயே உமைப்போற்றும்



வானுயர்ந்த வன்மரங்கள்
வளமாய் நற் குடைபிடிக்க
தேனி பாலை வீரை
தேக்கு, முதிரை முல்லையும்

மரம் பற்றி படர் கொடியும்
மலர்களும் மகரந்தமும்
துள்ளியோடும் புள்ளிமானும்
தள்ளிநிற்கும் தனிமரையும்

அழகு செய்யும் உம்பதியை
அற்புதமாய் என்றென்றும்
அமலமரியே எம் தஞ்சமே
அன்னையே செபமாலை தாயே. ●

*- ச. மாட்டின் டயஸ் -*

---

**கல்விப் பொதுத் தராதரப்......**
**13ஆம் பக்கத் தொடர்ச்சி.**

37. ஆங்கிலேயர் இலங்கைக்கு வருகை தந்தமையினால் எமக்குக் கிட்டிய தலை சிறந்த நன்மை ஒன்று.
   1. முழுமையான மதச் சுதந்திரம்
   2. இனச் சுதந்திரம் 3. இன விடுதலை
   4. கல்வி கற்கும் உரிமை 5. வறுமை ஒழிப்பு

38. கூனன் சிலுவை ஆனை என்ற கிளர்ச்சியைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட திருச்சபை.
   1. மலங்கார திருச்சபை 2. வைதீக சீரிய திருச்சபை
   3. இலத்தீன் திருச்சபை 4. இந்திய திருச்சபை
   5. இலங்கைத் திருச்சபை

39. இன்று ஆசியாவின் மிக முக்கியமான கிறிஸ்தவ அறிவு மையங்களில் ஒன்றாகத் திகழ்வது.
   1. மனிலா 2. லிவர்புல் 3. நாகசாக்கி
   4. கொழும்பு 5. சென்னை

40. இலத்தீன் திருச்சபையின் அமைப்பு முறையானது ...... என்று அழைக்கப்படுகின்றது.
   1. மறைமாவட்டம் 2. மறைக்கோட்டம் 3. மாகாணம்
   4. பங்கு 5. திருச்சபை

41. 2ம் வத்திக்கான் பொதுச்சங்கம் வெளியிட்ட 16 ஏடுகளை மூன்று வகையாகப் பாகுபடுத்தலாம். அப்பாகுபாடுகள் மூன்றும்.
   A கோட்பாடுகள் B அறிவுத் தொகுப்பு
   C விதித் தொகுப்புக்கள் D அறிக்கைகள்
   E கட்டளைகள்
   1. A,B,C 2. B,D,E 3. C,E,B 4. A,C,D 5. A,B,E

42. A 23ம் அருளப்பர் சின்னப்பர்
   B எட்மன்பீரிஸ் ஆண்டகை
   C ஆயர் ஹெல்டர் கமரா
   D அருட்பணி ரெயார்ட் டே சார்டேன்
   E அலெக்ஸான்டர் பிலேமின்
   இவர்களுள் இன்றைய உலகின் திருச்சபை எனும் வெளியீடு உருவாக்கக் காரணமாயிருந்தவர்
   1. A 2. B 3. C 4. D 5. E

43. கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான புதிய ஆர்வம் சுடுபாடு என்பவற்றைத் திருச்சபையில் ஏற்படுத்தியவரும் “கிறிஸ்தவ ஒன்றிப்பின் திருத்தந்தை” எனப் பெயர் பெற்றவரும்.
   1. 23ம் ஆசீர்வாதப்பர் 2. 10ம் சிங்கராயர்
   3. 16ம் ஆசீர்வாதப்பர் 4. 23ம் அருளப்பர் 5. 6ம் பவுல்

44. இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் வழிநடத்தலில் இயங்கும் ஆணைக்குழுவின் பெயர்.
   1. கத்தோலிக்க ஆணைக்குழு
   2. பொதுச்சேவை ஆணைக்குழு
   3. கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான ஆணைக்குழு
   4. ஆண்டவரின் சகோதரர்கள்
   5. திருச்சபையைப் பாதுகாப்போர்

45. உலகக் கிறிஸ்தவ சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டது.
   1. 1941 ஒகஸ்ட் 23 2. 1948 ஒகஸ்ட் 23
   3. 1956 ஒகஸ்ட் 23 4. 1948 டிசம்பர்
   5. 1958 ஒகஸ்ட் 25

46. பெலஞ்ஞா பல்கலைக் கழகம் எங்கே எப்போது ஆரம்பமானது.
   1. இத்தாலி கி.பி 1088 2. பாரிஸ் கி.பி 1092
   3. பிரான்ஸ் கி.பி 1192 4. ஜேர்மனி கி.பி 1088
   5. ஸ்பெயின் கி.பி 1092

47. தனது சொந்த வாழ்வினையும் உள்ளடக்கியதாக புனித அகுஸ்தீனரால் எழுதப்பட்ட உலகப் பிரசித்திபெற்ற புத்தகம்.
   1. சும்மா தியோலஜி
   2. வாழ்க்கை அறிக்கை/ தன்னிலை ஏற்பு
   3. இறைவனின் நகரம் 4. மூவொரு இறைவன்
   5. அப்போலஜியா

48. பிரசித்தி பெற்ற ‘த டிவைன் கொமடி’(The Divine Comedy) எனும் இலக்கிய நூலை எழுதியவர்.
   1. கபிரியல் போரே 2. வேர்ஜில்
   3. டான்டே அலிகியேரி 4. பிரட்ரிக் இன்டல்
   5. லுட்விக் வான் பித்தேவான்

49. பைசென்ரியன் கட்டிட கலையமைப்பிலான பிரசித்திபெற்ற புனித சோபியா ஆலயம் உள்ள இடம்.
   1. உரோமை 2. சைப்பிரஸ் 3. நேப்பிள்ஸ்
   4. மொஸ்கோ 5. கொன்ஸ்தாந்திநோபிள்

50. உலக சமாதான நாள் ஜனவரி 1ஆம் திகதி என யாரால் பிரகடனப்படுத்தப்பட்டது.
   1. ஐக்கிய நாடுகள் அமைப்பினால்
   2. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கெனடியால்
   3. திருத்தந்தை 23 ஆம் அருளப்பரால்
   4. பொதுநலவாய நாடுகளின் அமைப்பினால்
   5. திருத்தந்தை 6ஆம் சின்னப்பரால்

### பகுதி – II

01.(i) நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலான ஒற்றுமைகள் நான்கு தருக.
(ii) யூத நாகரிகத்தில் செல்வாக்குச் செலுத்திய மொசப்பத்தேமிய நாகரிகத்தின் கூறுகள் நான்கு தருக?
(iii) இஸ்ராயேலரின் நீதித்தலைவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட பணிகள் நான்கு தருக?
(iv) இயேசுவின் காலத்தில் வரிதண்டுபவர்கள் பாவிகள் என ஒதுக்கப்பட்டதற்கான காரணங்கள் நான்கு குறிப்பிடுக.
(v) யூதத் தலைமைச் சங்கத்தின் நான்கு முக்கிய விடயங்களை குறிப்பிடுக.

02.(i) இயேசுவின் மலைப்பொழிவின் முக்கிய விடயங்களில் நான்கு தருக.
(ii) இயேசு இறையாட்சியின் அடையாளமாக புதுமைகளை பயன்படுத்தியதற்கான காரங்கள் நான்கு குறிப்பிடுக.
(iii) இயேசுவின் இறையாட்சியில் நுழைந்த ஆதிக்கிறிஸ்தவர்களின் பண்புகள் நான்கு குறிப்பிடுக?
(iv) எருசலேம் பொதுச்சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நான்கு தருக.
(v) ஆரம்பகால கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் நால்வரைக் குறிப்பிடுக.

03.(i) கிறிஸ்தவத் துறவற வாழ்வு தோற்றம் பெறுவதற்கான காரணங்கள் நான்கு குறிப்பிடுக.
(ii) சீர்குலைந்திருந்த உலகினில் ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்த இரவலர் சபையினரிடம் எதிர்பார்க்கப்பட்ட பண்புகள் நான்கு குறிப்பிடுக.
(iii) மார்ட்டின் லூத்தரின் சீர்திருத்தச் செயற்பாடுகளில் நான்கு விடயங்களைத் தருக.
(iv) புனித தோமஸ் அக்குவானசின் சிந்தனைச் சிறப்புக்கள் நான்கு தருக.
(v) இலங்கை சமுதாயத்தில் திருச்சபையால் முன்னெடுக்கப்படும் நலன்புரிச் சேவைகள் நான்கு தருக.

04.(அ) ‘யூத நாகரிகம் பல நாகரிகங்கள் செல்வாக்குச் செலுத்திய ஒரு கலப்பு நாகரிகமாகும்.’ ஆராய்க.
(ஆ) இன்றைய சமுதாயத்தில் நாகரிகமானது அழிவடைந்து செல்வதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு ஒழுக்கமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உம்மால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை விளக்குக.

05.(அ) இறையாட்சியை மையப்படுத்திய இயேசுவின் புதிய சமூகப் பார்வை பற்றி விளக்குக.
(ஆ) உமது வாழ்வில் இறையாட்சியின் விழுமியங்களைக் கடைப்பிடிக்கும் போது நீர் எதிர்கொள்ளும் சவால்களைக் குறிப்பிட்டு விளக்குக.

06.(அ) மறுமலர்ச்சிக் காலத்தில் சீர்திருத்த சபைகள் உருவாக்குவதற்கான சமயப் பின்னணியை விபரிக்குக?
(ஆ) இன்று கிறிஸ்தவ சபைகளிடையே ஒற்றுமையை வலியுறுத்தி உம்மால் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளை விளக்குக.

07.(அ) இலங்கையில் போர்த்துக்கேயர் காலத்துக் கல்வி முறைகள் பற்றி ஆராய்க.
(ஆ) இன்று உமது பாடசாலையில் ஒழுக்க விழுமிய பண்பாடுகளை கட்டியெழுப்ப சமயக்கல்வி எவ்வாறு துணைபுரிகின்றன என்பது பற்றி விளக்குக.

08.(அ) “உலகில் அனைத்திலும் மேலானவன் மனிதன் அவன் மாண்பு நிறைந்தவன்” என்பதை இன்றைய உலகின் திருச்சபைக் கொள்கை திரட்டிலிருந்து விளக்குக.
(ஆ) இன்றைய உலகில் மனித மாண்புகள் அழிவடைந்து செல்வதற்கான காரணங்களைக் கூறி, அதை எவ்வாறு கட்டிக்காப்பீர் என்பது பற்றி விபரிக்குக. ●

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.204

யோபு (அதிகாரம் 9 முதல் 16 முடிய)

உங்கள் விடைகளை செப்ரெம்பர் மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ராசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | 03 | | ★ | 04 | | | | |
| 05 | | | | | | | | 06 | | |
| | | 07 | ★ | | 08 | | | | | |
| | | | | 09 | | | | | 10 | |
| | | | | 11 | | | | | | |
| | | 12 | | | | ★ | 13 | | | ★ |
| | | 14 | | | | 15 | | | | |
| | 16 | | | | 17 | | | | | |
| 18 | | | 19 | | ★ | | | 20 | | |
| 21 | | | | | | | | | | 22 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(– என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. அவர்க்கு எதிராய்த் தம்மைக் கடினப்படுத்தி .................... வாழ்ந்தவர் யார்?
4. புரியாப் புதிர்களை இருளினின்று .............ச் செய்கின்றார்.
5. இதோ அவர் மழையைத் தடுப்பாரெனில் அனைத்தும் ............... போம்.
8. உங்களுடைய முதுரைகள் சாம்பலையொத்த முது.................
11. .................................... நோக்கிப் பாதுகாப்பில் ஓய்வீர்.
12. வஞ்சக ........................ நீர் தேர்ந்துகொண்டீர்.
18. அவன் ........................ தன் ஊனின் வலியையே.
21. உமது ..................... என்னைக் காண விழைவீர்.

### மேலிருந்து கீழ்

1. என்னை வனைந்து ............. உண்டாக்கின உம் கைகள்.
2. ............ திளைத்திருக்கும் நீங்கள் என்னை ஏளனம் செய்கின்றீர்கள்.
4. என் ................. முறையீட்டைக் கவனியுங்கள்.
10. உயர்குடி மக்கள்மீது வெறுப்பினைப் ............................
11. என் .................. முற்றும் இற்றிடச் செய்தீர்.
13. இருள் ....................... அண்மையில் உள்ளதென்று அறிவர்.
14. அதுவே எனக்கு ...............ச் சான்று ஆயிற்று.
15. ஏனெனில் பொறுமையே அவர்களது செயலுக்கு ................. யாகும்.

### வலமிருந்து இடம்

2. நான் நேர்மையாக ............ அவருக்குப் பதிலுரைக்க இயலேன்.
3. நான் உங்களுக்கு .................. இளைத்தவனல்ல. (2வது எழுத்து 1வது எழுத்துக்குப் பின்னே நிற்கிறது)
6. .......... கூளத்தைக் கடிது விரட்டுவீரோ? (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
7. புழுதியில் என் ....................யைப் புதைத்தேன்.
9. ..................... வலிமையும் அவரிடமே உள்ளன.
10. குற்றமற்ற நேர்மையாளனாகிய நான் .................... நகைப்புப் ......................... ஆனேன்.
11. நான் குற்றம் புரிந்தால் அதை என்மீது ..................... விடீர்.
22. ஓ, என்னைப் ..................... ஒளித்து வைக்கமாட்டீரா?

### கீழிருந்து மேல்

9. அவரே ........... மறைபொருளை உமக்கு அறிவிக்கட்டும்.
10. ஆனால் அதை ஒரு .....................க் கருதுவதில்லை. (2வது எழுத்தும் இறுதியாக உள்ளது)
16. இருப்பினும் வன் ............... என் கையில் இல்லை.
17. இன்னலைக் .............. அவர்கள் இடுக்கண் ஈன்றெடுப்பர்.
18. மலர்போல் பூத்து அவர்கள் ....................... போகின்றனர்.
19. என் உதட்டின் ஆறுதல் உங்கள் .............க் குறைக்குமே.
20. கடவுளின் ....................... கனிவான சொல்லும் உமக்கு அற்பமாயினவே.
22. எனவே அவர்களிடமிருந்து உம் .................... த் திருப்பும்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 202 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



**முதலாம் பரிசு:**
B. பற்றிக்
அச்சுவேலி,
யாழ்ப்பாணம்



**இரண்டாம் பரிசு:**
இ. அகஸ்ரின்,
மடுக்கரை,
நானாட்டான்

**மூன்றாம் பரிசு:**
யே. சுதாகர்,
சின்னக்கடை,
மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 90 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 65 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 202ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
02. ஜெயா, எழுத்தூர், மன்னார்.
03. P. றொணி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
04. எ. ஜெய்மென்ராஜா, புத்திரர்கண்டான், முருங்கன்.
05. அ. மரிஸ்ரெலா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
06. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு
07. அ. இராசநாயகம் சில்வா, பெரியபண்டிவிரிச்சான், மடு.
08. ம. ஆரோக்கியநாதன், தபாலகவீதி, மன்னார்.
09. P. அனற் ஜீவிதா, பாப்பாமோட்டை, மாந்தை
10. T. அபிநயா, நறுவிலிக்குளம், மாதிரிகிராமம்.
11. S. வரதன் குரூஸ், வளனார்புரம், தாழ்வுபாடு.
12. அ. சகிலா, நெடுங்கண்டல், அடம்பன்.
13. அ. மோனியா, நெடுங்கண்டல், அடம்பன்.
14. தே. அன்புக்குமரன், சாளம்பன், ஆண்டான்குளம்.
15. E. நிறொக்ஷன், யோசவாஸ்நகர், தோட்டவெளி.
16. P. அனற் செறோன், பாப்பாமோட்டை, மாந்தை.
17. D. அன்ரனி ஜய்டன் குரூஸ், தலைமன்னார் கிராமம்.
18. N. அமிர்தநாதன் லியோன் குரூஸ், அவுஸ்ரேலியா.
19. D. அன்ரன் ஜதுக்சன் குரூஸ், தலைமன்னார் கிராமம்.
20. V. டிவைனா குரூஸ், வளனார்புரம், தாழ்வுபாடு.
21. P அனற்லீன், பாப்பாமோட்டை, மாந்தை.
22. பா. தர்ஷினி, உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல்.
23. J. சரண்யா, வெள்ளாங்குளம்.
24. N. கவிசன் பெனாண்டோ, சவேரியார்புரம், சிலாவத்துறை
25. வயலட் யோண், இல: 843 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
26. அ. ஜெயப்பிரியா, பெரியகட்டைக்காடு, நானாட்டான்.
27. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி.
28. ம. சாளினி, சாளம்பன், ஆண்டான்குளம்.
29. செ. மரியறூபன், குளக்கட்டு வீதி, அடம்பன்.
30. S. கொட்வின் குலாஸ், இரத்தினபுரி, வங்காலை.
31. சந்தான் லூட்ஸ் கிறிசாந்தினி, ஆட்காட்டிவெளி.
32. தே. அஸ்வினா, சாளம்பன், ஆண்டான்குளம்.
33. ச. மேரி சுகனியா, பொன்தீவுகண்டல், முருங்கன்.
34. T. சயூரன் லெம்பேட், மாவிலங்கேணி, அளவக்கை
35. செ. ஆன் நிதர்சனா மொறாய்ஸ், பட்டித்தோட்டம்
36. R. ஜெகநாதன், இல: 161, மடுக்கரை.
37. அ. ஒசின் சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
38. S. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.
39. ச. செலஸ்ரினா நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்.
40. செ. மனோகரி, பட்டித்தோட்டம், மன்னார்.
41. V. கெலன் தர்ஷிகா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
42. பி. நித்தியானந்தன் குரூஸ், ஆனாள்நகர், வங்காலை.
43. T. தினோசன் லெம்பேட், மாவிலங்கேணி, அளவக்கை.
44. R. தியோ கெயில் குலாஸ், கெபி வீதி, பேசாலை.
45. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
46. வெ. லொலிற்றா பறுனாந்து, 8ம் வட்டாரம், பேசாலை.
47. ச. மரியகொண்சிக்கா குரூஸ், சவேரியார்புரம்.
48. நி. நியோவின் பறுனாந்து, முத்தரிப்புத்துறை.
49. பி. நீக்கிலாஸ், பெற்றா, மன்னார்.
50. ஜெ. ஜெபியோன், கல்நாட்டி, முருங்கன்.

## ஒவ்வொரு.....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

இவ்வாண்டு மே மாதம் 20ஆம் திகதி லாம்பெர்ட் அவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த மருத்துவ உதவிகள் நிறுத்தப்படும் என்று பாரிஸ் மருத்துவமனை அறிவித்த வேளையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் 'தீவிர நோய்களோடு வாழ்ந்துகொண்டிருப்போருக்காகச் செபிப்போம். இறைவனின் கொடையான வாழ்வை அதன் தொடக்கத்திலிருந்து இயற்கையான முடிவுவரை பாதுகாப்போம். தூக்கியெறியும் கலாசாரத்திற்கு நம்மை உட்படுத்தாதிருப்போம்'' என்று விண்ணப்பித்திருந்தார்.

**ஆல்.ஃ.பி ஈவான்ஸ், மற்றும், வின்சென்ட் லாம்பெர்ட்**

மேலும் நீண்டகாலமாக மருத்துவக் கருவிகளின் உதவியுடனேயே வாழ்ந்துவரும் இங்கிலாந்தின் குழந்தை ஆல்.ஃ.பி ஈவான்ஸ், மற்றும் பிரான்சின் வின்சென்ட் லாம்பெர்ட் ஆகிய இருவருக்காகவும் செபிக்குமாறு கடந்த 2018ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி வழங்கிய அல்லேலூயா வாழ்த்தொலி உரையில் விண்ணப்பித்திருந்தார் திருத்தந்தை பிரான்சிஸ். இதைத் தொடர்ந்து மூன்று நாள்களுக்குப் பின் ஏப்ரல் 18ஆம் திகதி தன் மறைக்கல்வி உரையில் மீண்டும் இவ்விருவருக்காகவும் செபிக்கும்படி மக்களிடம் விண்ணப்பித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறைவன் ஒருவரே வாழ்வின்மீது அதிகாரம் கொண்டவர் வாழ்வைக் காப்பது ஒன்றே நமக்கு வழங்கப்பட்டுள்ள கடமை என்று வலியுறுத்திக் கூறினார்.

**யுத்தனேசியா, அனைவருக்குமே ஒரு தோல்வி**

இவ்வாண்டு யூன் மாதம் 2ஆம் திகதி நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த நோவா பொத்தோவேன் என்ற 17 வயது இளம்பெண், மனத்தளர்ச்சி நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவர்கள் மற்றும் தன் பெற்றோரின் அனுமதியுடன் தன் உயிரை மாய்த்துக்கொண்டதையடுத்து திருத்தந்தை யுத்தனேசியா அல்லது மருத்துவ உதவியுடன் நடைபெறும் தற்கொலை குறித்து டுவிட்டர் செய்தியொன்றை வெளியிட்டிருந்தார். "யுத்தனேசியா, மற்றும், மருத்துவ உதவியுடன் நடைபெறும் தற்கொலை நம் அனைவருக்குமே ஒரு தோல்வி. விரக்தியால் தங்கள் வாழ்வை முடித்துக்கொள்ள விழைவோரை அப்படியே விட்டுவிடாமல் அவர்களுக்கு நம்பிக்கையூட்டுவது நம் கடமை'' என்று தன் டுவிட்டர் செய்தியில் கூறியிருந்தார் திருத்தந்தை. ●

## மடு அன்னையின்.....

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

திருப்பலியின் ஆரம்பத்தில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் அனைவரையும் மகிழ்வோடு வரவேற்றார். பின் மன்னார் மறைமாவட்ட ஆயர் திருவிழாவிற்கு வருகைதந்திருந்த அனைவருக்கும் இறை ஆசீர் வழங்கி வரவேற்று மிகவும் ஆழமான சிந்தனை கொண்ட மறையுரையாற்றினார். அவர் தனது மறையுரையில் "இன்று மனிதர்கள் மனிதர்களை சந்திக்கின்றார்கள், ஆனால் மனித மனங்கள் சந்திப்பதில்லை'' என்ற ஆழமான ஆன்மீக சிந்தனையை இத்திருவிழாவில் கூடியிருந்த இறைமக்களுக்கு வழங்கினார். ●

## மானங்கவெளி.....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

இந்நிகழ்வு பங்குத்தந்தை அருள்பிரகாசம் அடிகளாரின் வழிநடத்தலில் ஆலய அருட்பணிப் பேரவையினதும், ஆலய மக்களினதும் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடந்தேறியது.

தகவல்: ஆலய அருட்பேரவை, பொருளாளர்.

தொடர்புகளுக்கு : 077-8436478 (கட்டடக் குழு செயலாளர்) ●

## அவுஸ்ரேலியா.....

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

அருட்பணி. பஸ்ரியன் அமதி, அருட்பணி. கிளேரியன், அருட்பணி. றுவான் ஆகியோர் இத்திருப்பலியில் இணைந்து கொண்டனர். அவுஸ்ரேலியாவில் இத்திருத்தலத்தில் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் மடு அன்னையின் திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்ற வேளையில் இந்தவருடம் மூன்றாம் ஆண்டில் எம் ஆயர் இத் திருவிழாவில் கலந்து கொள்வது சிறப்பாகும். இம்முறை 2000 இற்கும் அதிகமான இறைமக்கள் இத்திருவிழாவில் பங்கெடுத்ததாக குறிப்பிடப்படுகின்றது. இத்திருத்தலத்தின் வளாகத்தில் உலகின் மிகப் பிரசித்திபெற்ற திருத்தல ஆலயங்கள் சிற்றாலயங்களாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் எம் மடு அன்னையின் சிற்றாலயமும் ஒன்றாகும். ●

## மன்னார் மறைமாவட்ட.....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

அதன்படி சமாசத்தின் தலைவராக திரு. எஸ்.எ மிராண்டா, துணைத்தலைவராக திரு. அ. அந்தோனிமுத்து, திரு அ. யோ. அந்தோனிதாஸ், செயலாளராக திரு யோ. ஆரோக்கியம் குருஸ், துணைச் செயலாளராக திரு அ. ஜோன்பொஸ்கோ, பொருளாளராக திரு வெ. அ. றெஜினாஸ்ட், உள்ளகக்கணக்காய்வாளர் திரு. லூ. றொசாறியோ குருஸ், திரு B.S. எமில்குலாஸ் அவர்களும் முறைப்படி முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டு தெரிவு செய்யப்பட்டார்கள். தலைவர் அவர்கள் இதுவரைக் காலமும் நிர்வாகத்தைச் சிறப்பான முறையில் நடாத்துவதற்கு தமக்கு உதவியும் ஒத்துழைப்பையும் வழங்கிய நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும் கிளைச்சங்கங்களின் உத்தியோகத்தர்களுக்கும் நன்றியைத் தெரிவித்தார். மேலும் எமது காரியாலயத்திற்குத் தேவையான கணனி, அச்சு இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம் மேலும் கூடுமானவரை சகல அரசியல் பிரமுகர்களிடமிருந்தும் தேவைப்பட்ட தளபாடங்களைப் பெற்றுத்தந்த நமது இயக்குனர் அருட்பணி. அல்பன் இராஜசிங்கம் அடிகளாருக்கு விசேட நன்றிகளையும் காரியாலய பணியாளராக கடமையாற்றிக்கொண்டிருக்கும் செல்வி. வி. றொசினா ஜான்சன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர். தொடர்ந்து சிறப்பு அதிதியாக சமுகம் தந்திருந்த மன்னார் பிரதேச சமுகசேவை உத்தியோகத்தர் திரு. எஸ் சந்திரபோஸ் அவர்கள் முதியோருக்கு அரசினால் வழங்கப்படும். கொடுப்பனவுகள், சலுகைகள் என்பவற்றையும் எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பதைப் பற்றித் தெளிவாக எடுத்துரைத்தார்கள். அதனைத் தொடர்ந்து கௌரவ செயலாளர் அவர்களின் நன்றியுரையுடனும், செபத்துடனும் இயக்குனர் அவர்களின் ஆசீருடனும் பிற்பகல் 1.00 மணியளவில் கூட்டம் இனிதே நிறைவேறியது. ●

*- தகவல். திரு. எஸ். எ. மிராண்டா -*

## பிறரன்பு.....

04ஆம் பக்கத் தொடர்ச்சி

திருப்பலியில் 'கடவுளே நம்மை நோக்கி இறங்கி வருகின்றார் அவரே நம்மை மீட்கின்றார்'', என்ற கருப்பொருளை மையமாக வைத்து மறையுரை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ். மீட்பையும், விடுதலையையும் குறித்துப் பேசும் திருப்பலி வாசகங்களில் பெயேர்செபாவிலிருந்து கரானை நோக்கிச் சென்ற யாக்கோபு கண்ட கனவு குறித்து கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிலத்தில் ஊன்றியிருந்த ஏணியின் மறுமுனை வானத்தைத் தொட்டுக் கொண்டிருக்க இறைவனே அங்கிருந்து யாக்கோபு உடன் பேசியதைச் சுட்டிக்காட்டினார். பாபேல் கோபுரத்தைக் கட்டுவதன் வழியாக வானகத்திற்கு ஏறிச் செல்ல முயன்ற மக்களின் எண்ண ஓட்டத்திற்கு நேர் மாறாக இறைவனே மேலிருந்து கீழிறங்கி வந்தது மனித குலத்திற்கும் இறைவனுக்கும் இடையே நிலவும் நெருங்கிய தொடர்பின் வெளிப்பாடாக இருந்தது என்றார் திருத்தந்தை பிரான்சிஸ். தொழுகைக்கூடத் தலைவரின் மகளுக்கு இயேசு உயிர் கொடுத்ததையும், பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் வருந்திய ஒரு பெண் அந்நோயிலிருந்து விடுதலை பெற்றதை சுட்டிக்காட்டினார் திருத்தந்தை பிரான்சிஸ். மேலும் வாழ்வில் ஓரந்தள்ளப்பட்டுள்ள மக்களுக்கு பிறரன்பு நடவடிக்கைகளில் முதலிடம் கொடுக்கப்பட வேண்டுமென இயேசு தன் சீடர்களுக்கு காண்பிக்கின்றார் எனவும் எடுத்துரைத்தார். ●

# நீங்காத நினைவுகள்

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 09 1951



உதிர்வு 02 07 2009

### திரு. ச. அந்தோனிப்பிள்ளை (அழகு)

(சகாயவீதி, அடம்பன்)

உருவத்தில் உயர்ந்தவர் எங்கள் அழகு மாமா
உள்ளத்தில் இவர் ஒரு அழகிய நிலவு!
அருகில் வந்து அணைத்து உதவும்
அன்பால் நிறைந்தவர் எங்கள் அழகு மாமா
தெருவின் இவர் நின்றால் ஒரு கூட்டம் நிற்கும்,
திரும்பி நடந்தால் ஒரு ஊர்வலம் தொடரும்!
நேற்று விழுந்த இடி போல் நெஞ்சம்
கனக்கின்றது - உம் பிரிவால்!
பத்து வருடம் ஆகுதே ஐயா - உம்
பாசச் சிரிப்பைப் பார்த்து!!

**பிரிவால் நினைந்துருகும்:**
ஆனாள்பிள்ளை திருச்செல்வம் குடும்பம்.

## 39ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 03 1955



உதிர்வு 15 07 1980

### திரு. திருச்செல்வம் டோமினிக் (சிங்கம்)

(சகாயவீதி, அடம்பன்)

**"உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோ.11:25).**

தலை மகனாய் வந்தாய் - எங்கள்
தலை நிமிர உழைத்தாய்!
மலை ஒன்று சாய்ந்து - மண்ணில்
புதையுண்டு போனது போல்
நிலை குலைந்து போனோம் அண்ணா!!
நூறாண்டு கழிந்தாலும் - உம்
பேர் சொல்லி வாழ்வோம் அண்ணா!!

**பிரிவால் நினைந்துருகும்:**
பாசமிகு சகோதரர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 22 06 1934



உதிர்வு 13 06 2019

### திரு. வி. சந்தான் பர்னாந்து

(சிறுக்குளம், பறப்பாங்கண்டல்)

மாணிக்க கோபுரமே நீர் சாய்ந்து போனதினால்
அம்பு தைத்து அந்தரித்து அலறுகின்ற மான் ஆனோம்
பாரினிலே எம்மைப்பெற்று நேசத்தோடெமை வளர்த்து
பாசத்தால் வெந்துருகி மெழுகாகிப் போன எங்கள் ஐயா
சிறகிழந்து பறவைகளாய் உம் குஞ்சுகள் நாம் தவிக்கின்றோம்.
ஐயா நீங்கள் இல்லாமல் அனுதினமும் அழுகின்றோம்
ஐயா என்னும் அமுதமொழி எம் வீட்டில் மறையுதையா
ஐயா என்றழைக்கும் போது பதில் தரத்தான் நீங்கள்
இல்லை ஐயா! உங்கள் நினைவுகளோடு உங்கள் ஆன்மா இறைவனில் சாந்தி பெற வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:** மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 35ஆம் ஆண்டு, 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. ப.ஞானப்பிரகாசம் (இளைப்பாறிய அதிபர்) — திருமதி. ஞா. ஞானப்பு (இளைப்பாறிய ஆசிரியர்)

(மாந்தை, மன்னார்)

மலர்வு : 19 - 06 - 1923
உதிர்வு : 17 - 07 - 1984

மலர்வு : 10 - 03 - 1928
உதிர்வு : 02 - 02 - 2000

பாசத்தின் பிறப்பிடமே, எம் குடும்ப உறவுகளே
உங்கள் உறவைவிட நிகரேதும் எமக்கில்லையே!
உங்கள் நினைவுகள் என்றும் மனோரம்மியமானவையே
நீங்கள் வாழ்ந்த காலமதில் - எம்
நெஞ்சைவிட்டகலா அன்பை சொரிந்திட்டீர்.
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவுகள் எம் இதயமதில் என்றும் மங்காது. உங்கள் ஆன்மா அமைதிபெற இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
சகோதரன் (பிலிப்பு குடும்பத்தினர்)

## இறைவனின்.....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஒவ்வொரு நாளும் @pontifex என்ற வலைத்தள முகவரியில் திருத்தந்தை வழங்கிவரும் டுவிட்டர் செய்திகள் இத்தாலியம், ஆங்கிலம், பிரெஞ்சு, இஸ்பானியம், போர்த்துகீசியம், ஜெர்மன், போலந்து, இலத்தீன் மற்றும் அரேபியம் ஆகிய ஒன்பது மொழிகளில் வெளியாகின்றன. யூலை 11ஆம் திகதி முடிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்திகள் 2,043 என்பதும் அவரது செய்திகளை ஆங்கில மொழியில் பின்பற்றுவோரின் எண்ணிக்கை மட்டும் 4 கோடியே 88 இலட்சம் என்பதும் குறிப்பிடத்தக்கன. இத்துடன் @franciscus என்ற பெயரில் இயங்கிவரும் instagram முகவரியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செயற்பாடுகளை மையப்படுத்தி அவ்வப்போது வெளியிடப்பட்டுவரும் படங்கள் மற்றும் காணொளிகள் இதுவரை 738 என்பதும் அவற்றைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை 62 இலட்சம் என்பதும் குறிப்பிடத்தக்கன. 'பாலம் அமைப்பவர்" என்ற பொருள்படும் Pontifex என்ற இலத்தீன் சொல்லை தன் டுவிட்டர் முகவரியாகக் கொண்டு முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் 2012ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் திகதி டுவிட்டர் செய்திகளைத் தொடக்கினார்.

உயிர் கொடுத்ததையும், பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் வருந்திய ஒரு பெண் அந்நோயிலிருந்து விடுதலை பெற்றதையும் வாசிக்கும் நாம் நோயிலிருந்தும், சாவிலிருந்தும் இயேசு விடுவித்ததைக் காண்கின்றோம் என்று கூறிய திருத்தந்தை வாழ்வில் ஓரந்தள்ளப்பட்டுள்ள மக்களுக்கு பிறரன்பு நடவடிக்கைகளில் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என இயேசு தன் சீடர்களுக்கு காண்பிக்கின்றார் எனவும் எடுத்துரைத்தார்.

லாம்பதூசா தீவுக்கு மேய்ப்புப்பணி பயணம் மேற்கொள்ளப்பட்டதன் 6ஆம் ஆண்டை நினைவுகூரும் இவ்வேளையில் பாலைவனங்களில் உயிரிழப்போர் தடுப்பு மையங்களில் சித்திரவதைப்படுவோர் கடலில் பலியாவோர் ஆகியோரை எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கூறினார். அத்துடன் நம்மிடையே ஒடுக்கப்பட்டோர் பாகுபாட்டுடன் நடத்தப்படுவோர் உரிமை மீறல், சுரண்டல், கைவிடப்படுதல் ஆகிய கொடுமைகளால் துன்புறுவோர் மற்றும் ஏழைகள் ஆகியோரை அன்புகூர்ந்து காக்கவேண்டிய இயேசுவின் விண்ணப்பத்தை நிறைவேற்றுவோம் என்ற அழைப்பையும் தன் மறையுரையில் முன்வைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கத்தோலிக்கத் திருஅவையின் தலைமைப் பொறுப்பை ஏற்ற 2013ஆம் ஆண்டு உரோம் நகரை விட்டு வெளியே சென்ற முதல் பயணமாக யூலை 8ஆம் திகதி லாம்பதூசா தீவுக்கு மேய்ப்புப்பணி பயணம் மேற்கொண்டார்.

## நீதிபதிகளுக்காகவும்.....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

நீதிபதிகள் எடுக்கும் முடிவுகள், குடிமக்களின் உரிமைகள், உடமைகள் ஆகியவற்றைப் பாதிக்கின்றன என்று இக்காணொளியின் தொடக்கத்தில் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தொடர்ந்து அவர்கள் எடுக்கும் முடிவுகள் எவ்வித வெளி அழுத்தங்களுக்கும் இடம் தராதவண்ணம் நடுநிலையோடு எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். எக்காரணம் கொண்டும் உண்மையை விட்டுக்கொடுக்காத இயேசுவின் எடுத்துக்காட்டை நீதிப்பணியில் ஈடுபட்டுள்ளோர் பின்பற்றவேண்டும் என்று திருத்தந்தை தன் இறைவேண்டல் கருத்தில் அழைப்பு விடுத்துள்ளார். நீதி வழங்கும் பணிகளில் ஈடுபட்டிருப்போர் நேரிய பண்புடையவர்களாக பணியாற்றவும் அதன் பயனாக இவ்வுலகில் பரவலாகக் காணப்படும் அநீதி இறுதி வெற்றியடையாமல் இருக்கவும் நாம் செபிப்போமாக என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் யூலைமாத இறைவேண்டல் கருத்தை நிறைவு செய்துள்ளார்.

## சமுதாய.....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

அமேசானில் இடம்பெற்று வருபவை உலகளவில் எதிரொலிக்கின்றன. தங்களின் பூர்வீக நிலப்பகுதி திருடப்பட்டதால் சொந்த நிலப்பகுதியிலே வெளிநாட்டவர் போன்று ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், அமேசானில் வாழ்ந்து வருவதையும் சுட்டிக்காட்டியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். 'Laudato si' குழுக்கள் புதிய வாழ்க்கைமுறையை ஊக்குவிப்பதற்குத் தங்களை அர்ப்பணித்து வருவதைப் பாராட்டியுள்ள திருத்தந்தை ஆராதனை திருநற்கருணை மற்றும் தவ வாழ்வு பற்றியும் தன் சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டுள்ளார். நம் பொதுவான இல்லமாகிய இப்பூமியை பாதுகாப்பது குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் Laudato si' அதாவது இறைவா உமக்கே புகழ் என்ற திருமடலை வெளியிட்ட பின்னர் இத்தாலியின் பல்வேறு இடங்களில் Laudato si' குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## குடும்ப மறைக்கல்வி...

06ஆம் பக்கத் தொடர்ச்சி.

### பங்குத் தளத்தில்..

குடும்ப மறைக்கல்வி என்பது குடும்பங்களினால் மட்டும் சாத்தியமாகாது இப்பணியில் குடும்பங்களை ஊக்குவித்து, பயிற்றுவிக்க பங்குத்தளம் முக்கிய பங்கை ஆற்றுகின்றது.

பங்கு பணியாளர் அடிக்கடி குடும்பங்களை சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்க வேண்டும். உடனடி மேய்ப்புப்பணி தேவைகளை நிறைவேற்ற வேண்டும். பங்களவிலே குடும்பநலப் பணிக்குழுவை (Family Apostolate Commission) உருவாக்கி உடைந்துபோன குடும்பங்கள் பிரச்சனைகளினால் தவிக்கின்ற குடும்பங்களை சந்தித்து சரி செய்ய வேண்டும்.

வயது வந்த பெரியவர்களுக்கு (Adults) சீரான முறையில் விவிலிய இறையியல் கருத்தரங்குகளை நடத்த வேண்டும். அன்பியங்களின் மூலம் குடும்ப மறைக்கல்வியை கற்பிக்க அன்பியங்களை உயிரோட்டமுள்ளவையாக வைத்திருக்க வேண்டும். குடும்பங்களில் பக்தி முயற்சிகளான திரு இருதய ஆண்டவர் திருப்படம் நிறுவுதல். குடும்ப செபம், வீடு மந்திரிப்பு, விவிலிய வாசிப்பு, குடும்ப செபமாலை போன்ற நிகழ்வுகளின் முக்கியத்துவத்தை மறையுரைகளிலோ, வீடு சந்திப்பிலோ விளக்கிச் செல்ல வேண்டும். குடும்பங்களில் மூடப்பழக்கவழக்கங்கள் பின்பற்றப்படுகின்றனவோ என்பதை பரிசோதிக்க முறையான மறைக்கல்வியை வழங்க வேண்டும்.

### முடிவுரை

குடும்ப நற்பண்பை விதைக்கும் ஒரு நாற்றங்கால் செடியாக்கும் ஒரு தோட்டம், மரமாக்கும் ஒரு தோப்பு, அது கற்களால் கட்டப்பட்ட கட்டிடம் அல்ல. கணவன் மனைவி, பிள்ளைகள், உறவினர். சுற்றத்தார் என்ற உறவுகளால் கட்டப்பட்ட ஒரு கோவில், அங்கே இறைவன் குடிகொண்டிருக்கின்றார். புனிதம் இழையோடிக்கொண்டிருக்கின்றது. இறைவன் உறையும் இவ்வில்லத்தை. புனிதம் வீசும் இச்சூழலைக் கொடுக்கும் தீய காரணிகளுக்கு ஆட்படாமல் இருக்க நம் விசுவாசம் கட்டிக்காக்கப்பட வேண்டும். ஆழப்பட வேண்டும். அதற்குக் குடும்ப மறைக்கல்வி உற்ற துணையாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

## சிறுக்கண்டல்....

08ஆம் பக்கத் தொடர்ச்சி.

சிறப்பு அதிதிகளாக முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. சுரேந்திரன் றெவ்வல், அடம்பன் பங்குத்தந்தை அருட்பணி. T. நவரெட்ணம், சாந்திபுரம் பங்குத்தந்தை அருட்பணி. அ. இராயப்பு, கட்டைக்காடு பங்குத்தந்தை அருட்பணி. வே. எமில் எழில்ராஜ், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. K.J பிரட்லி, நானாட்டான் பிரதேச செயலாளர் திரு. ம. சிறிஸ் கந்தகுமார், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் திரு. தி. பரஞ்சோதி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிதார்கள்.

மன்னார் திருஅவையின் சிறுக்கண்டல் பங்கு புனித அந்தோனியார் இரண்டு இரவு நாடகத்தை ஆற்றுகை செய்து கத்தோலிக்க கலைவடிவங்களை பாதுகாப்பதற்காக மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா சிறுக்கண்டல் பங்குத்தந்தை, பங்குமக்கள், கலைஞர்கள் அனைவரையும் பாராட்டி மகிழ்கின்றது. தொடர்ந்து கலைவழி இறைவழி செல்ல வாழ்த்துகின்றோம்.




**Head Office:** #345, Galle Road, Colombo 04, Sri Lanka.
Tel: 011 2553440, 2553441

**Jaffna Branch:** #272/1, Stanley Road, Jaffna, Sri Lanka.
Tel : 021 2224647, 2219424

**Vavuniya Branch:** #45 B/1, 2nd Cross Street, Vavuniya, Sri Lanka.
Tel: 024 2226800, 2226801

**Trincomalee Branch:** #334, Court Road, Trincomalee, Sri Lanka.
Tel: 026 2227242, 2227244





## இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!



**திரு. திருமதி. சபாரெட்ணம் மோகனதாஸ் செபமாலை**
**(உமநகரி, நானாட்டான்)**
**1993.03.03**
**2019.03.03**

பூத்துக் குலுங்கும் புதுமண வாழ்வில் இல்லறத்தில் நல்லறம் கண்டு இனிதாய் வாழ்ந்து பொன் விழாக் காணும் எம் தாய் தந்தையரை வணங்கி வாழ்த்தி நிற்கின்றோம்.

பிள்ளைகள் மூன்றினைப் பெற்று ஏழ்மையிலும் எளிமையாய் வறுமையிலும் செம்மையாய் பேணி வளர்த்து எமக்கு செய்த சகல விதமான நன்மைத் தனங்களுக்கும் நன்றி கூறி நிற்கின்றோம்.
தொடர்ந்தும் இவர்கள் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வேண்டுமென்று மரியன்னை வழியாக எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**வாழ்த்துவோர் :**
பிள்ளைகள், மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள்

# நீங்காத நினைவுகள்

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. ச. அந்தோனிப்பிள்ளை**
**(அழகு)**
**(சகாயவீதி, அடம்பன்)**

மலர்வு : 18 - 09 - 1951
உதிர்வு : 02 - 07 - 2009

**"என் தலைவரே! தலைமுறை தோறும் நீரே எங்கள் புகலிடமாய் உள்ளீர்"**

பத்தாண்டு போனாலும் எமது நெஞ்சை
விட்டு அழியாதப்பா உங்கள் முகம்
சமூகத்திற்கு அயராது பணிகள்
பல புரிந்து, இறைவனின் அழைப்பிற்கு
நீர் இணங்கியே சென்று விட்டீர்
விண்ணுலகில் நீர் அமைதிபெற்று வாழ்ந்திட
எம் செபத்தில் வேண்டுகின்றோம்.
உம் ஆன்மா சாந்திபெற

**பிரிவை நினைந்துருகும்,**
மனைவி, மகன், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும், உற்றார், உறவினர்கள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி. திருச்செல்வம் ஆனாள்பிள்ளை**
**(சகாயவீதி, அடம்பன்)**

மலர்வு : 29 - 09 - 1939
உதிர்வு : 12 - 07 - 2018

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"**

பட்டுச் சரிந்த மொட்டை மரமாய்,
சொத்துச் சுகம் வற்றிப்போன இளமைக்காலம்,
தன்னை வருத்தித் தன் குடும்பம் தளைக்க
ஓய்வின்றி உழைத்த தாய்!
பற்றிப் பிடித்துப் படர்ந்த பூக்கள் எம்மை
விட்டுப் பிரிந்த தியாகத் தாயே...
விழி ஓரம் வழிந்தோடும் கண்ணீரில் வருடம் ஒன்றாய்
வலி சுமந்து வாடுகின்றோம் அம்மா

**பிரிவால் நினைந்துருகும்:**
பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 11 | | 26 |
| 08 | | 07 |
| 1955 | | 2015 |



**திரு. மருசலின் ஜோர்ச் குமார்**
**(சின்னப்பண்டிவிரிச்சான், மடு)**

இரவின் மடியில் ஒரு கனமேனும் உங்களை நினைக்காத நாளில்லையப்பா. வேதனையில் சோதனைகள் வேடிக்கை காட்டுதப்பா நாங்கள் பார்க்கும் விழிகளுக்குள் குரோதங்கள் தானப்பா பாசத்தை காட்ட மாட்டார்களா என்ற ஏக்கம் தானப்பா நீங்கள் இருந்த காலங்களில் வசந்தமாக கண்ட உறவுகள் எல்லாம் இப்போது எங்கேயப்பா மறைந்து போனது. முடிவடையும் உங்கள் வான்வீட்டில் ஆறுதலுக்காய் தினமும் இறையடி வணங்கி நிற்கின்றோமப்பா.
உங்கள் குடும்பத்திற்காய் அனுதினமும் வான் வீட்டில் எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர்

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 29 | | 14 |
| 10 | | 07 |
| 1997 | | 2009 |



**செல்வி. குமார் ரினுஷா லக்ஷி**
**(எமில்நகர், மன்னார்)**

பிரிவின் நினைவு நாளாம் ஈரைந்து ஆண்டு நிறைவிலே...
பத்தாண்டு கடந்ததம்மா மலர்ந்த உன் வதனம் கண்டு!
தசாப்தமும் நிறைந்ததம்மா பூத்த உன் புன்னகை கண்டு!
அமைதியும் மலருமம்மா உன் வெள்ளை உள்ளம் கண்டு!
ஆவலும் கூடுமம்மா உன் கனிவான பேச்சைக் கண்டு!
நினைவுகள் தொடருதம்மா உந்தன் வாழ்வை எண்ணி!
உள்ளமும் ஏங்குதம்மா உந்தன் பிரிவின் நிலையை எண்ணி!
தாழ்மையாய் வேண்டுகின்றோம் ஆண்டவன் அடியினிலே!
அமைதியாய் துயில் கொள்வாய்
ஆண்டவன் மடியினிலே!

**பிரிவால் நினைந்துருகும்,**
அம்மா, அப்பா, அண்ணா, அம்மம்மா மற்றும் அன்பு உறவுகள்.

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி




**வே. ஜேம்ஸ் பீரிஸ்** **ஜே. லினட் பீரிஸ்**
**(7ஆம் வட்டாரம், பேசாலை.)**

மலர்வு : 04 - 11 - 1940
உதிர்வு : 17 - 08 - 1999

மலர்வு : 17 - 11 - 1969
உதிர்வு : 08 - 07 - 1999

மண்ணில் மனிதமாகி! மாந்தருள் தெய்வமாகி! மண்ணை விட்டு மறைந்து, இரு தசாப்தம் ஆன போதும் வேர்களில் இருந்து கசியும் நீராய் உங்கள் நினைவுகள் எமக்குள்... தெய்வத்தை நீங்கள் தேடிச் சென்றபோது பக்தியை எண்ணிப் பெருமைப்பட்டோம் - அந்த தெய்வம் உங்களைக் கூட்டிச் சென்ற போது சக்தியை இழந்து வெறுமைப்பட்டோம். உங்கள் நினைவுகளோடு உங்கள் ஆன்மா இறைவனில் சாந்தி பெற வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.